ஜநவிநோதிநி.

இல. 9, 10.] { செப்டெம்பர்மீ அக்டோபர்மீ } 1884 [புஸ்த. XV.

நமது தேசத்தை ஆளவரும் புதிய கவர்னர் ஜனரலாகிய

டப்ரின் பிரபு அவர்கள்.

இப்பொழுது இவ்விந்துதேசத்துக் கவர்னர் ஜனரலாயிருக்கின்ற ரிப்பன் பிரபு அவர்கள் சிலநாளைக்குமுன் நினைத்திருந்தபடி இன்னும் சிலகாலம இததேசத்தைப் பரிபாலிக்காமல் சீக்கிரமே சுதேசத்திற்குத் திரும்பிப்போகவேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறார். இதற்குக் காரணம் அவருடைய தேகசவுக்கியத்திற்கும், அவர் துரைசானியினுடைய தேகசவுககியததிற்கும் இந்த உஷ்ணபூமி ஒத்துக்கொள்ளாமலிருப்பதேயாம். இநதப் பிரபு இந்துககள் தம் தம் நாட்டு வியவகாரங்களைத் தாமே விசாரித்துக்கொள்ளலாமெனவும், கறுப்புமனிதர் வெள்ளைமனிதர் என்கிற வேற்றுமையின்றி யாவரையும் துரைத்தனத்தார் ஒருகண்ணாய்ப பார்க்கவேண்டுமெனவும் இவை முதலிய நமது தேசத்தவர்களுக்கு அனுகூலமான ஏற்பாடுகளை செய்து நமமைப் பரிவுடன் பாதுகாததவராகையால், இவர் இநதேசம் விட்டுபபோகிற சமயத்தில இவரிடத்திலே தமக்குள்ள நன்றியறிதலை வெளியிடும்பொருட்டு அங்கங்கே நம்மவர் அநேகர் சபைசேருகின்றனா.

இந்த ரிபபன் பிரபு சுதேசம் போக நினைத்ததுகண்டு அவர்க்குப் பதில் டப்ரின் என்னும் பேர்பெற்ற பிரபு அவாகள் கவர்னர் ஜனாலாக நியமிக்கபபட்டிருக்கின்றனர். இவருடைய வடிவழகே இச்சஞ்சிகைபபடததில் விளங்குகின்றது. இவா 1826-௵ பிறந்தவா. இவர் இளமைப்பருவம் தொடங்கியே ஈவிரக்கம், பூததயை பச்சாத்தாபம், குடிகளிடத்தில் அபிமானம் முதலிய பல நற்குணங்கள் அமைந்தவர்; கல்விகேள்விகளில் மிகத் தேர்ச்சிபெற்றவர்; வித்தியாவிஷயத்தில் பல பட்டப்பெயர்களும் பெற்றவர்; வயதுமுதிர்ந்தவரும், பல ராஜதானிகளுக்கு ஸ்தானாபதியாய்ப்

போயிருந்தவரும், கவர்னர் ஜனரலாய்ப் போய் ஆட்சிசெலுத்தியவரும், பற்பல சங்கங்களில் ஊடாடியவருமாகையால் உலகவியற்கையை நன்றாய்க் கண்டறிந்தவர். தாம் அனுபவத்திற்கண்ட பல விஷயங்களைப்பற்றிப் புத்தகங்களும் எழுதியிருக்கின்றனர். இந்த டப்ரின் பிரபு 1862-ம் வருஷத்தில் ஹாரியெத் என்னும் பெருமாட்டியை மணம்புரிந்து பல புதல்வரையும் பெற்றிருக்கின்றார்.

அந்தந்தவிடங்களில் இந்தப் பிரபு நடத்திய காரியங்களால் இவர் மிகுந்த சாமர்த்தியமும் அனுபவமும் ராஜ்யபரிபாலனம் செய்யும் திறமையும் உள்ளவரெனத் தெளிவாய்த் தெரியவருகின்றது. மேலும் இந்தப் பிரபுவே ஒரு சமயத்தில் ஒரு தேசத்திற்குக் கவர்னர் ஜனரலாகின்றவர் இத்தன்மையராய் இருக்கவேண்டுமென மொழிந்திருக்கிறார். அதன் அபிப்பிராயத்தை ஒருவாறு அடியிற் சுருக்கிச் சொல்லுகிறோம்:—அந்தந்தத் தேசத்தை ஆளவேண்டியவகை, அந்தந்தத் தேசசரித்திரம், ஐதிகம் இவற்றுள் முக்கியமான விஷயங்களை நன்றாய்க் கண்டறிந்து, பக்ஷபாதத்திற்கு இடங்கொடாமல், கலகக்காரர் பேச்சுக்குக் காதுகொடாமல், வேண்டியவனென்று ஒருவனை உயர்த்துவதும் வேண்டாதவனென்று விலக்குவதுமாகிய வேற்றுமையின்றி யாவரையும் ஒருகண்ணாய்ப் பார்த்து, அமைச்சர்களின் ஆலோசனையைக் கேட்கும் உத்தம குணமுடையோனாய், தங்களுடைய கருத்துக்கிணங்கி நடக்கின்ற நல்லரசனிவனெனக் குடிகள் கொண்டாடும்படி நாடாள வல்லவனே கவர்னர் ஜனரலாவதற்குரியவனெனக் கூறியிருக்கின்றார். ஆதலின் அவ்வாறே இந்தப் பிரபு மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியார்க்குப் பதிலாக நமது தேசத்து ஆட்சியைக் கைக்கொண்டு தாம் சொன்ன வாக்கு உண்மையாகும்படி நடந்து காட்டக்கடவரென்றும், இவர்க்கு ஆயுள் ஆரோக்கியம் ஐசுவரியம் முதலியன மேன்மேலும் விருத்தியாகக்கடவனவென்றும் நாம் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

செய்ந்நன்றி கொன்ற கொலைபாதகன்.

நெடுநாளைக்குமுன்னே வடதிசையில் இமாசலத்திற்கும் விந்தியபருவதத்திற்கும் இடையிலுள்ள ஆரியாவர்த்தத்திலே பிரமகுலத்திற் பிறந்த கவுதமனென்னும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயத்தில் திரவியம் சம்பாதித்துக்கொண்டுவரவேண்டுமெனத் தேசாந்தர யாத்திரை புறப்பட்டு வடக்கே வெகுதூரம் சென்றான். அங்கே துருக்கதேசத்துக்கு அருகில் வேடச்

...ரியொன்று இருந்தது. அவ்வூரில் பிராமணப்பூண்டே கிடையாதாயினும் அங்குள்ளவர்களெல்லாம் மிகுந்த செல்வவான்களாகக் காணப்பட்டமையால் அவ்விடத்திற்குச் சென்றால் தன் மனோரதம் நிறைவேறுமெனக் கருதிப் பிராமணன் அவ்வூருக்குப் போனான். அது வழிபறித்துக் கொள்ளையிடுகிறவர்கள் குடியிருக்குமிடம். அவ்வூரில் ஒரு கள்ளன் கொள்ளையடித்தே மிகுந்த பொருள் சேர்த்துக்கொண்டு பின்பு அதிகமான அக்கிரமங்கள் செய்யாமல் வர்ணாச்சிரம தருமங்களைத் தெரிந்துகொண்டு ஸத்தியத்துக்குக் கட்டுண்டு ஈச்சுவரபக்தியும் உடையவனாய் இரப்போர்க்குத் தன்னாலியன்றவளவு யாசகங்கொடுப்பது முதலிய பல நற்செய்கைகளும் ஆஸ்தையுடன் செய்துவந்தான். அவ்வூருக்குப் போன கவுதமன் அந்தக் கள்ளன்வீட்டிற் புகுந்து யஜமானனைக் கண்டு தனக்கு ஒரு வருஷத்திற்குப் போதுமானவளவு பொருள் உதவி செய்யவேண்டும், தான் மிகவும் எளியவன் என்று யாசித்துத் தங்கியிருக்கத் தனக்கு இடமும் விடவேண்டுமென வேண்டிக் கேட்டான். அந்த வேதியனைக் கண்டு கள்ளன் சந்தோஷமடைந்தவனாய் அவன் கேட்டபடியே அவனுக்கு வேண்டிய ஆடையாபரணங்களும் மற்றும் பல பொருள்களும் அளித்துத் தன்னிடத்திலிருந்த ஒரு கணவனிழந்த கைம்பெண்ணையும் கலியாணம் செய்துகொள்ளும்படி கொடுத்து வசிப்பதற்கு ஒரு விடுதியும் விட்டான். அவைகளைப் பெற்றுக்கொண்டு பிராமணன் மிகவும் மனமகிழ்ந்தவனாய் அப்பெண்ணையும் கலியாணஞ்செய்துகொண்டு அவளுடன் வேடன் விட்ட விடுதியிலே சுகமாக வசிக்கலானான். அதுதெரிந்து அங்குள்ள வேடர்கள் அவன் குடும்பத்துக்குப் போதுமான உதவிகள் பலவும் செய்துவர, ஒன்றுலொன்று குறைவில்லாமல் வேதியன் அவ்வேடச்சேரியிலேயே வெகுநாள் சுகமாயிருந்தான்.

அவ்வளவோடாவது அவன் நிலைத்துத் தன் ஒழுக்கந்தவறாமல் நடந்துவந்தானோ இல்லை:

> "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
> கினத்தியல்ப தாகு மறிவு"

என்றவண்ணம் வேடர்களுடைய சகவாச சந்தோஷத்தால் மதிமயங்கி அம்பும் வில்லும் கையாளப்பழகி அந்த வேடர்கள் செய்து வருவதுபோலவே தானும் நாள்தோறும் காட்டிலே பறக்கின்ற பறவைகளை அம்புபோட்டு அடித்துக் கொல்லத்தொடங்கினான். வரவர ஜீவகாருணியமென்பது அவன் மனதைவிட்டு விலக ஆரம்பித்தது; ஜீவவதைசெய்வதில் விருப்பமும் வல்லமையும் அதிகமாயிற்று. ஆகவே எப்போதும் உயிர்களை இம்சிப்பதிலேயே ஆவல்கொண்டவனாகி நாளளவிலே வேதியனென்றும் வேடர்களென்றும் வேற்றுமை

தோன்றாதபடி அவ்வூரிலுள்ள வேடர்களோடு தானும் ஒரு வேட
னான். அவர்களைப்போலவே காட்டிலுள்ள பலவகைப் பறவைக
ளைக் கொன்று தின்றுகொண்டு வேறொரு சிந்தையின்றி வேடச்சேரி
யிலே சுகமாக வாழ்ந்துவருகையில் அவனுக்குத் தெரியாமலே பல
மாதங்கள் கழிந்துபோயின.

இப்படியிருக்கும்காலத்திலே ஒருநாள் மற்றொரு பிராமணன்
அவ்விடத்திற்கு வந்தான். அவன் பிரமசரியவிரதத்தினின்றும்
விலகாதவனாய் முடியிலே சடையும், அரையிலே மரவுரியும், மார்
பிலே மான்தோலும் தரித்தவனாகி என்றும் வேதமோதுதலைவிட்டு
விலகாதிருப்பவன்; உள்ளும் புறமும் பரிசுத்தமானவன்; யாரிடத்
திலும் வினயமுள்ளவன்; ஆகாரநியமம் தவறாதவன். இவன் மற்றெ
வனுமல்ல, கவுதமனுடைய ஊரான்; அவனுடன்கூட ஒரே உபாத்
தியாயரிடத்தில் கல்விகற்றவன்; மேலும் அவனிடத்தில் அதிக
மான நேசமும் பிரீதியுமுடையவன். அந்தப் பிராமணன் கவுத
மன் வசித்துக்கொண்டிருந்த வேடச்சேரிக்குத் தற்செயலாக வந்து
அங்கே மற்றவர்களுடைய வீட்டிலிறங்க மனமில்லாமல், வேதியன்
வீடு எங்கேயாவது உண்டாவென அவ்வூர்முழுதும் சுற்றி விசா
ரித்துக் கவுதமன் இருக்குமிடம் தெரிந்து அவ்வீட்டில் புகுந்தான்.
அப்பொழுது வேட்டைக்காக வனத்துக்குப்போயிருந்த கவுதமன்
சிறிதுநேரத்துக்கெல்லாம் உடம்பில் உதிரம் பெருகப்பெருகத் தோ
ளில் பறவைகளின் மூட்டையும் கையில் அம்பு வில் முதலிய ஆயு
தங்களுமாய் வீட்டிற்கு வந்தான். அவன் பார்வைக்கு மனிதமாமி
சம் புசிக்கின்ற ராக்ஷதர்போல் இழிதொழில்செய்பவனாயிருப்பினும்,
இன்னானென நிதானித்து அறிந்துகொண்டு வெட்கமடைந்தவனாய்
அவ்வீட்டில் வந்திருந்த புதுப்பிராமணன் அவனைநோக்கி ஒரு
வார்த்தை சொன்னான்: அடா கவுதமா, நீ என்னகாரியம் செய்
யத்துணிந்தாய், உனக்கு ஏன் இப்படி மதிகெட்டுப்போயிற்று.
உத்தமகுலத்திற் பிறந்து பிராமணனெனப் பெயரெடுத்தாயே;
நமதுதேசத்தில் உன்னை அறியாதாரில்லை, அப்படிப்பட்ட நீ எவ்
வாறு வேடத்தொழில் புரியத்துணிந்தாய்; உனக்குச் சுயமாய் ஜாதி
அபிமானமிராவிட்டாலும், சகலவேதங்களையும் கரைகண்டு எங்கும்
பிரசித்தர்களான உன் முன்னோர்களையாவது நினைக்கவேண்டாமா!
அந்த மகான்களுடைய மரபிற்பிறந்து இப்படிக் குலபாதகனாவது
மிகவும் இழிவானது; இனியாகிலும் உன் ஜாதி மதாசாரங்களையும்
இப்பொழுது நீ செய்துவருகிற இழிதொழிலையும் ஆய்ந்துபார்த்து
இவ்விடம் விட்டு அப்புறப்படுவதற்கு வேண்டிய வழி தேடு; வீணே
கெட்டுப்போகாதே என்றான். தனக்கு இதத்தையே கருதும் உயி
ர்த்தோழனாகிய அவன் இவ்வாறு சொல்லியதுகேட்டுக் கவுதமன்
பரிதாபமடைந்தவனாய், பிராமணோத்தமரே, நான் மிகவும் தரித்
திரன், வேறுவிதமாய்ப் பிழைப்பதென்றாலும் நான் சிறிதும் வேத

மோதாதவன், அதனால் யாசித்துப் பொருள்சம்பாதித்துக்கொண்டு போகலாமென்று இவ்விடத்திற்கு வந்தவனேயொழிய வேறன்று. இப்பொழுது உம்மைக் கண்டு நான் கிருதார்த்தனாயினேன், இனி நான் இவ்விடத்திலிருப்பதில்லை, உம்மோடுகூடவே வந்துவிடுகிறேன்; பொழுதுபோயிற்றே, இனி எங்கே போகிறது? இராத்திரி இவ்விடத்திலேயே இருக்கலாம்; நாளைக்காலையில் இவ்விடம்விட்டுப் போவோம் என்று சொன்னான். அம்மொழிகேட்டு அவனிடத்தில் இரக்கமுற்று அவன் கேட்டுக்கொண்டபடியே புதிய பிராமணன் அன்றிரவை அவ்விடத்திலேயே கழிக்க நிச்சயித்தான். ஆயினும் அங்கே தண்ணீரும் அருந்தவில்லை; இந்தப் பாதகன் உணவைப் புசிப்பதினும் பட்டினிகிடப்பதே நலமென நினைத்து, அவன் கடவுளுடைய திருநாமங்களைத் துதித்துக்கொண்டே தூங்கிப்போனான்.

மறுநாள்காலையில் எழுந்து அந்த வேதியன் கவுதமனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தான் கருதியவிடத்திற்குப் போகப் புறப்படும்போது, கவுதமனும் அவனுடன் வீட்டினின்றும் புறப்பட்டு நேராகக் கடலைநோக்கிச் சென்றான். செல்லுகையில் நடுவழியே கப்பல்வார்த்தகர்கள் அநேகர் போகக்கண்டு அவர்களைத் துணையாகக் கொண்டு கூடவே போனான். போகும்போது சிறிதுதூரத்துக்கப்பால் ஒரு மலைக்காட்டிலே மதயானையின் கையில் அகப்பட்டுக் கூடவந்த வர்த்தகர்களெல்லாம் வெகுவாய் உயிரிழந்தார்கள். அத்தருணத்தில் கவுதமன் நடுநடுங்கி எப்படியோ யானையின் கையில் அகப்படாது உயிர்தப்பினால் போதுமென்று அதிவேகமாய் ஒருவர்க்கும் தெரியாமல் வடதிசைநோக்கி ஓடிப்போனான். இப்படித் துணையானவர்களைத் துறந்து அத்தேசத்தையும் விட்டுவிலகி வழிதுறையில்லாமல் தனியே நடுக்காட்டில் ஓடும்போது கடற்கரையோரமாய்ப் போகிறவழி ஒன்று அகப்பட்டது. அவ்வழியைப் பற்றிக்கொண்டு செல்லுகையில் சிறிதுதூரத்துக்கப்பால் வெகு விசித்திரமான வனமொன்றிருந்தது. அவ்வனத்திலே பலவிதமான பூஞ்செடிகளும் பழச்செடிகளும் அடர்ந்து காலவேற்றுமையில்லாமல் ஆறு ருதுக்களும் ஒன்றாய்க் குடிகொண்டதுபோலப் பலவகைப்பட்ட பூக்களும் பழங்களும் நிறைந்து அனைவர்க்கும் ஒரு அதிசயக்காட்சியாய் இருந்தன. தேவோத்தியானம்போன்ற அந்த அரணியத்திலே இயக்கர் கின்னரர் முதலிய பல தேவகணங்களும் வந்து விகரித்துக்கொண்டிருந்தனர்; குயில் மயில் முதலிய பல்ஜாதிப் பறவைகள் பாடுவதும் ஆடுவதுமாய்க் கூடிக்குலாவிக்கொண்டிருந்தன. இவைகளையும் இவைபோன்ற பின்னும் பலவிதமான அதிசயக்காட்சிகளையும் கண்டு களித்துக்கொண்டே கவுதமன் அவ்வனத்துவழியே சென்றான். அவ்வுத்தியானவனத்து நடுவிலே தேவலோகம்போல் அதிரமணீயமாய்ப் பொன்மயமான மணல்களடர்ந்து மிகவும் அற்புத

மான ஓரிடத்திலே பூமிக்கெல்லாம் ஒரு பெருங்குடைபோலச் சுற்றித் தழைத்த பல கிளைகளோடுகூடி மிகப் பெரிதான ஆலமரம் ஒன்றிருந்தது. திவ்யமான அம்மரத்தின் அடிப்புறமெல்லாம் குமு குமுவென்று எங்கும் வாசனைவீசப்பெற்ற சந்தனகுழம்பினால் நனைத்துக் கற்பகதருவின் மலர்கள் தூவிப் பிரமதேவனுடைய சபைபோல் விளங்கியது. சுற்றிலும் பூஞ்செடிகளடர்ந்து தேவேந்திரன் மாளிகைபோல மேன்மைபெற்றிருக்கின்ற அவ்விடத்தைக் கண்டு மிகவும் மனமகிழ்ச்சிகொண்டு கவுதமன் அம்மரத்தடியில் உட்கார்ந்தான். உட்கார்ந்தவுடனே அவ்வனத்திலுள்ள பலவிதமான பூக்களின் வாசனைப்பொடிகளை வாரிக்கொண்டு மந்தமாருதமானது சுகமாய் அவன்மேல் மெல்ல வீசியது. குளிர்ந்தகாற்று மேலே தாக்கவே நெடுந்தூரம் வழிநடந்து வருத்தப்பட்டவனாதலால் மெய்ம்மறந்து தக்ஷணமே தூங்கிப்போனான். அப்படியிருக்கச் சூரியாஸ்தமயகாலமாயிற்று. ஸந்தியாகாலம் நெருங்கியது கண்டவுடனே பிரமலோகத்திற்குப் போயிருந்த நாடீஜங்கனென்னும் ஒரு புள்ளரசு தன் வீடாகிய அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தது. அந்தப் பக்ஷிராஜனுக்கு மாதாபிதாக்கள் கசியபப் பிரஜாபதியும் தாக்ஷாயணீ தேவியும். அது மகா மேதையுள்ளது; எல்லா நூல்களையும் கற்றுணர்ந்தது; உலகத்திலெங்கும் ஒப்புயர்வில்லாததாய் ராஜதருமனென்ப பட்டப்பெயர்பெற்றது; தேவதைகளுக்கொப்பான காந்தியும் செல்வமுமமைந்தது. அந்தப் பறவைக்கரசு கோடிசூரியனுதித்தாற்போல விளங்கப்பெற்ற திவ்யமான ஆபரணங்களை யெல்லாவுறுப்புகளிலும் அணிந்துகொண்டு கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாத காந்தியுடன் எதிரே வரக்கண்டு, கவுதமன் மிகவும் வியப்படைந்தவனாய், நெடுநேரம் பசித்திளைத்திருப்பவனாகையால், அதை அடித்துத் தின்னவேண்டுமென்ற கருத்துடன் கூர்மையாய்ப் பார்த்தான்.

இதற்குள் இவன் அம்மரத்தடியில் உட்கார்ந்திருப்பதை ராஜதருமன் பார்த்து அவனிடத்திற்கு வந்து, ஸ்வாமீ, தேவரீர் யாரோ ஒரு பிராமணர்போலக் காண்கிறது. இன்று இவ்விடத்திற்கு எழுந்தருளியது அடியேனுடைய பாக்கியவிசேஷமே, பொழுதுபோய் ஸந்தியாகாலமாகிவிட்டது, இன்று ராத்திரி இவ்விடத்தில் தங்கியிருந்து காலையில் அப்பால் எழுந்தருளவேண்டும். இரவில் வீட்டிற்குவந்த விருந்தாளியை வெளிவிடலாகாது. நான் வடிவத்தில் கொக்காயிருந்தாலும் கசியபப் பிரஜாபதியினுடைய புத்திரன்; என்னுடைய தாய் தாக்ஷாயணீதேவி; நான் செய்கிற பூஜையை தேவரீர் அவசியம் திருவுள்ளம் பற்றவேண்டும் என்று சொல்லிற்று. தேனொழுகும்படியான அதின் வாய்மொழியைக் கேட்டு அந்தப் பிராமணன் இதென்னவென்று வியப்படைந்திருக்கையில் அந்தப் பறவையானது முறைப்படி அவனுக்குச் செய்யவேண்டிய அதிதிபூஜையைச் செய்து புஷ்பாசனத்தில் உட்காரவைத்து, சிறந்த கனிகிழங்கு

முதலியவைகளை அவனுக்கு உணவாயளித்தது. அவன் சந்தோஷமாய் அவைகளை அருந்தும்போது அவனுடைய இளைப்பை ஆற்றும்படி கொக்கானது தன் சிறகுகளால் மெல்ல விசிறியது.

புசித்தெழுந்தபின்பு அப்பறவை அவனுக்கு இனியமான பூம்பள்ளியொன்று அமைத்து அதில் அவன் உட்கார்ந்தபிறகு, நீவிர் யார், உமது கோத்திரமென்ன? எங்கிருந்து வருகிறீர், இங்கே வந்ததற்குக் காரணமென்னவென்று அவனுடைய வரலாறுகளை வினவ ஆரம்பித்தது. அதுகேட்டு அவன் தன் குலாசாரங்களைப்பற்றி மற்றொன்றும் சொல்லாமல் நான் கவுதமனென்றுமாத்திரமுரைத்து, பின்பு நான் மிகவும் தரித்திரன், திரைகடலோடியாயினும் திரவியம் தேட வேண்டுமென்னும கருத்தோடு கடற்கரைக்குப் போகலாமென்று வந்தேனென்றான். அதுகேட்டு ராஜதருமன் அவனிடத்தில் இரக்கங்கொண்டு, அப்படியாயின் இனி தேவர்க்கு ஒரு குறையுமில்லை; இவ்விடத்திலேயே மனோரதத்தைப் பூர்த்திசெய்துகொண்டு இப்படியே திருமாளிகைக்குத் திரும்பி எழுந்தருளலாம்; இப்போது நீர் எனக்கு மித்திரனாகிவிட்டீராதலால் இனி உமக்கு ஒரு குறையுமில்லாமல் காப்பாற்றுவது என்னுடைய கடமை என்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டது.

காலையில் உதயமானவுடனே ராஜதருமன் எழுந்து கவுதமனிடத்திற்கு வந்து, என்னுயிர்த்தோழனே, இதோ இவ்வழியாகப் போனால் இங்கிருந்து மூன்றுயோசனை தூரத்துக்கப்பால் என்னுடைய தோழனான விரூபாக்ஷனென்கிற அரக்கனொருவன் இருக்கிறான்; அவனிடம்போய் நான் அனுப்பியதாகச் சொல்வீரானால் அவன் உமக்கு வேண்டியதைக் கொடுத்தனுப்புவான், சிறிதும சந்தேகமில்லை என்றது. அதைக்கேட்டுக் களிப்படைந்தவனாய் அங்கிருந்து புறப்பட்டு வழியிலுள்ள பழங்களையெல்லாம் பறித்துத் தின்றுகொண்டே வழிநடக்கிற வருத்தம் சிறிதும தோன்றாமல் அவ்வனத்தினடுவிலேயே நெடுந்தூரம்போய், கடைசியில் மதிட்சுவர்போல் நாலுபக்கமும் மலைகளால் சூழப்பெற்ற மேருவிரஜமென்னும் பட்டணம்போய்ச் சேர்ந்தான். அப்பட்டணத்தரசனான ராக்ஷசராஜன் இவன் வருவதற்குமுன்னமே தன் தோழன் ஒரு விருந்தினனைத் தன்னிடத்திற்கு அனுப்பியிருக்கிறானென்கிற செய்தி தெரிந்துகொண்டு தன் தூதர்களையழைத்து, நமது பட்டணத்திற்குக் கவுதமனென்று ஒரு பிராமணர் வருகிறார். நீங்கள் முன்னதாய்க் கோட்டைவாயிலில போய்க் காத்திருந்து அவரை நம்மிடத்திற்கு அழைத்துவாருங்கள் எனத் திட்டஞ்செய்தனுப்பினான். உடனே அந்தத் தூதர்கள் கவுதமர் எங்கே, கவுதமா எங்கே என்று கூவினவண்ணமே பருந்துகள்போலப் பறந்தோடிப் பட்டணத்துக் கோட்டைவாயிலண்டைக்கு வந்தார்கள். அப்பொழுது அங்கே வந்துகொண்டிருந்த கவுதமனைக் கண்டு அத்தூதர்கள், விரூபா

க்ஷனென்கிற எங்களரசன் உமது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்; விரைவாக நடந்துவாருமென்று அழைத்தார்கள். அது கேட்டு அவன் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென்று மிகவும் மனமகிழ்ந்து அதனால் வழிநடந்துவந்த வருத்தமெல்லாம் நீங்கினவனாகி, அப்பட்டணத்தின் பெருமைகளைப் பார்த்துப் புகழ்ந்துகொண்டு அவர்களோடுகூடவே, இந்த ராஜனை எப்பொழுது காணப்போகிறோமென்ற ஆவலுடனே, வெகு விரைவாக நடந்து ராஜமாளிகை போய்ச்சேர்ந்தான்.

ராஜமாளிகையிற் புகுந்தவுடனே விரூபாக்ஷன் எதிர்கொண்டு வந்து அழைததுக்கொண்டுபோய் அவனுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து ஆசனத்தில் உட்காருவித்து, நீர் யார், உமது பேரென்ன, கோததிரமென்னவென்று வினவினான். அதற்கு அந்தப் பார்ப்பான், நான் கவுதமன் என்றுமாத்திரஞ் சொல்லிவிட்டுச் சும்மாயிருந்தான். அவன பேருக்குமாத்திரம் பார்ப்பானேயொழிய ஒரு நூலையும் பார்த்தவனன்று; பாயபாரத்தொழிலும் புரிந்தவனன்று; அவனுக்குக் குலகோததிரங்கள் எப்படித் தெரியும். அவன் சும்மாவிருககககண்டு ராக்ஷஸராஜன் நீர் எந்தவூர், எவ்விடம், உமக்குப் பெண்சாதி யார்? உண்மையைச் சொல்லும், பயப்படவேண்டாம் என்று கேட்க, கவுதமன், நான் மத்தியதேசத்தில் பிறந்தவன்; இப்பொழுது வேடச்சேரியில் வாசஞ்செய்கிறேன். என் பெண்சாதியோ முன்னொரு கணவனிழந்த சூத்திரப்பெண். இவை யாவும் உண்மையான விஷயங்களே என்றான். அதுகேட்டு ராக்ஷஸராஜன், இதென்ன, இவன சரிதை விசித்திரமாயிருக்கின்றது; இவனுக்குத் தானங்கொடுப்பதினால் நமக்கென்ன சுகிர்தமுண்டாகும் என்று சற்றுநேரம் ஆலோசித்துப் பின்பு, அதெப்படியாயினுமாகட்டும்; பிறபபிலே இவன் பிராமணன், மகானுபாவனான நமது தோழனுக்குத் தோழன்; நமது தோழனால் அனுப்பப்பட்டவன்; நமது தோழனுக்குத் திருப்திசெய்விக்கவேண்டுவது அவசியம். மேலும் இன்றையதினம் கார்த்திகைக்காக ஆயிரம் அந்தணர்களுக்கு ஸம்மானஞ்செய்யும்படி அதற்குவேண்டிய பொருளும் சங்கறமித்து வைத்திருக்கிறோமாகையால் அவர்களுள் இவரும் ஒருவராகட்டும், இவ்விஷயத்தில் விசாரிக்கவேண்டுவது ஒன்றுமில்லையென நிச்சயித்தான்.

அன்றையதினம் காலையில் கலைகளில் தேர்ந்த கல்விமான்களாகிய வேதியர்கள் ஆயிரம்பேர் ஸ்நானசந்திமுதலிய காலைக்கடன்களை முடித்து அவரவர்க்குரிய ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு ராஜசபைக்கு வந்தார்கள். விரூபாக்ஷமகாராஜன் அனைவர்க்கும் ஒரு தன்மையாய் ஆசனங்கள் அமைத்து அவற்றில் அவர்களை இருக்கச்செய்து விதிப்படி யாவரையும் பூஜித்து அவரவர் எடுக்கத்தக்கவளவு பொன், வெள்ளி, வச்சிரம், வைடூரியம்

முதலிய பொருள்களும், பட்டுவஸ்திரங்களும், பொற்பாத்திரங்களும் பரிசுகொடுத்து, பொற்பாத்திரங்களிலே யாவருக்கும் போஜனமளித்தான். இந்த ராக்ஷஸராஜன் ஆடிமாதம், கார்த்திகை, மகம் இப்பருவங்களில் பிராமணர்களுக்கு விசேஷமான ஸம்மானங்களும் ஸமாராதனையும் செய்விப்பது வழக்கம். அவற்றில் கார்த்திகைமாதத்திலே மிகவும் அதிகமான உத்தமதானங்கள் செய்வதுண்டு. அவ்வண்ணமே இக்கார்த்திகைப்பருவத்தில் எல்லோர்க்கும் திருப்திபிறக்குமளவும் திரவியங்களைக் கொடுத்து அவரவர் புசித்த பொற்பாத்திரத்தையும் அவரவரே யெடுத்துக்கொண்டுபோம்படி உத்தரவுபண்ணினான். பிராமணர்களெல்லாம் வெகு சந்தோஷமாய் அவரவர் எடுக்கக்கூடியவளவு பொருள்களை எடுத்துக் கட்டிக் கொண்டார்கள். அப்பிராமணர்களை நோக்கி இராக்கதன், இன்று ஒருநாள்மாத்திரந்தான் நீங்கள் இங்கே இராக்ஷதர்களிடத்தில் அச்சமில்லாமல் தங்கியிருக்கலாம்; ஆதலின் அவரவர் சீக்கிரமே இவ்விடம்விட்டுப் போய்விடவேண்டுமென்று சொல்ல, அதைக் கேட்ட வேதியர்கள் உடனே அவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் தம் தம் வழியே போய்விட்டார்கள்.

கவுதமன் செய்தி என்னவென்பீர்களோ? அவனும் அவ்வாயிரம் அந்தணர்களுள் ஒருவனாய் மற்றவர்களினும் மிகுதியான வெகுமதிபெற்றுச் சுமக்கமாட்டாத சுமையுடன் மெல்லமெல்ல நடந்து ராஜதருமன் வசித்திருக்கும் ஆலமரத்தடி போய்ச்சேர்ந்தான். மிகவும் இளைப்படைந்து பசியால் வருந்தினவனாய் அம்மரத்தடியில் அவன் வந்து உட்கார்ந்ததுகண்டு, ராஜதருமன் அதிக அன்புடனே அவனிடம் வந்து சுகமாய்ப் போய்வந்தீரா என நல்வரவு விசாரித்துப் பின்பு அவனுடைய அலுப்புத் தீரும்படி தன் சிறகுகளால் மெல்ல விசிறித் தக்க உணவுகளும் அளித்து அவனைப் பூஜித்தது. புசித்துப் பசிதணிந்து இளைப்பாறி உட்கார்ந்திருக்கும் போது கவுதமன் சும்மா இராமல் ஒரு சதிநினைக்கலானான்: அதாவது, இந்த மூட்டை நாம் சுமக்கக்கூடாத பெருஞ்சுமையாயிருக்கின்றது. பொருளாசையாகிய பேய்பிடித்து நான் இவ்வளவையும் வாரிக்கொண்டுவந்தேன்; கொண்டுவந்ததை இனி வழியில் எறிந்துவிட்டுப்போகவும் மனம் வரவில்லை; போகவேண்டியவிடமோ சமீபத்திலில்லை; நெடுநாள் பிரயாணம் நடந்துபோகவேண்டியிருக்கின்றது; மார்க்கத்திலே போஜனத்திற்கும் உபாயமில்லை; இதற்குச் செய்யவேண்டியதென்ன என்று ஆலோசித்து, ஊர்போமளவும் உயிரைக் காத்துக்கொள்ள மற்றொன்றும் உபாயம் தோன்றாமல், இதோ பக்கத்தில் மிகப் பெரிதான பறவை படுத்திருக்கின்றதே, இதைக் கொன்று கையிலே கொண்டுபோனால் வழிப்போஜனத்துக்குக் குறைவில்லை; சீக்கிரமேகொன்று எடுத்துக்கொண்டு உடனே ஓடிப்போகவேண்டுமென்று தீர்மானித்தான்.

இந்தக் கவுதமன் இராத்திரி குளிரினால் வருந்தப்போகிறானே என்று அவனுடைய சுகத்திற்காகப் பக்கத்தில் தீமூட்டிவைத்து அவனை மனமொத்த நேசனென்று நம்பிப் பக்கத்தில் அந்தக் கொக்கு தானும் படுத்திருந்தது. நன்றியற்ற நீசனாகிய அக்கொடியன் அச்சமயத்தில் எழுந்து அருகில் எரிந்துகொண்டிருந்த அக்கினியினின்றும் ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்து அதனால் நம்பிப் படுத்திருந்த பறவையைக் கொன்றுவிட்டான். கொன்று மிகவும் மனங்களித்தவனாய் அதன்மேலுள்ள சிறகுகளையும் மயிர்களையும் பிசிறியெறிந்து அங்கிருந்த நெருப்பில் அதைச் சமைத்து மூட்டைகட்டிப் பொன் மூட்டையோடு அதையும் எடுத்துக்கொண்டு அதிவேகமாய் ஓடிப் போனான். அன்றும் மறுநாளும் கழிந்தன. அப்போது விரூபாக்ஷன் தன் மகனை நோக்கி, பிள்ளாய், பட்சிராஜனான ராஜதருமன் எங்கேயோ தெரியவில்லை; அவன் நாள்தோறும் காலையில் பிரமதேவனை வணங்கிவரும்படி பிரமலோகத்திற்குப் போவது வழக்கம்; அங்கிருந்து வரும்போது என்னைப் பாராமல் ஒருநாளும் வீட்டுக்குப் போவதில்லை. இப்பொழுது இரண்டுநாளாயிற்று; அவன் நமது வீட்டுக்கு வரவேயில்லை. அதனால் என் மனது மிகவும் கலக்கமுற்றுத் தத்தளிக்கின்றது. அவன் இருக்குமிடம் போய்ப் பார்த்து அறிந்துகொண்டு வரவேண்டும். ராஜதருமனுக்குத் தோழனெனப் பேரிட்டுப் பார்ப்பானைப்போல ஒருவன் இங்கே வந்திருந்தானே, அவன் தன் குலதருமங்களை விட்டொழிந்த கிராதகன்; கெட்ட நடக்கையும் துஷ்டபுத்தியுமுடையவன்; பூததயை பச்சாத்தாபமில்லாதவன்; கள்ளர்களிலும் கடையானவன் என அவனைப் பார்த்தபோதே எனக்குத் தெளிவாய்ப் புலப்பட்டது. அவன் ராஜதருமன் இருக்கும் இடத்திற்கே போயினானாகையால், ஒருவேளை அவன் கொலைசெய்துவிட்டானோவென என் மனம் பரிதபிக்கின்றது. பிள்ளாய், நீ சீக்கிரமாய்ச் சென்று ராஜதருமன் உயிரோடு இருக்கிறானா என்பதைத் தெரிந்துகொண்டுவாவென்று கட்டளையிட, ராக்ஷஸராஜன் மகன் பல அரக்கர்களைக் கூட்டிக்கொண்டு ராஜதருமனிருப்பிடமான ஆலமரத்தை நோக்கி விரைந்தோடினான். அவ்விடத்தில் பார்த்தபோது ராஜதருமனில்லை; அதனுடலின் எலும்புக்கூடுமாத்திரம் கீழே விழுந்துகிடந்தது. அதுகண்டு, ராஜதருமன் கொலையுண்டு உயிரிழந்தானென நிச்சயித்துக் கண்ணுங் கண்ணீருமாய் விரூபாக்ஷன் மகன் கவுதமனைப் பிடிக்கும்படி அவன் சென்ற வழி தேடிக்கொண்டு வெகுவேகமாய் ஓடினான். அதற்குள் கவுதமன் நெடுந்தூரம் ஓடிப்போகவில்லை; சமீபத்திலேதான் போய்க்கொண்டிருந்தான். இரண்டொரு நிமிஷத்தில் அரக்கர் அவனைப் போய்ப் பிடித்துக்கொண்டனர். சிறகு கால் எலும்பு ஒன்றுமில்லாத பறவையுடல் அவனிடத்திலிருக்கவே, சொத்துங் கையுமாய் அக்கொலைபாதகனான கள்ளனைப் பிடித்திழுத்துக்கொண்டு அதிசீக்

பரோபகாரம் செய்யப் பின்வாங்காத பெருமாட்டி.

இத்தேசத்தில் ஸ்திரீகள் வீட்டிலேயேயிருந்து தந்தம் குடும்பத்திற்கு வேண்டிய காரியங்களைக் கருத்தாய்ப் பார்த்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளிப்படாமல் அடக்கமாயிருப்பதே அவர்களுடைய தருமமெனக் கருதப்பட்டிருக்கின்றது. ஐரோப்பாகண்டத்தாருடைய கொள்கையோ அப்படிப்பட்டதன்று; ஸ்திரீகளும் புருஷர்களைப்போலவே சகல கலைகளையும் கற்று வெளியேவந்து லோகோபகாரமான பல காரியங்களையும் செய்துவருவது ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களிலும் வழக்கமாயிருக்கின்றது. அவ்வண்ணமே அங்குள்ள பல பெருமாட்டிகள் தம்முடைய சவுக்கியத்தையும் பாராமல் பரோபகாரமே பெரிதென நினைத்து வறுமையினாலும் வியாதியினாலும் வருந்துகின்றவர்களை உபசரித்து மிகப் பெருமை பெற்றிருக்கின்றனர். அப்படிப்பட்ட பெருமாட்டிகளுடைய வரலாறுகளை யெடுத்துரைப்பது இத்தேசத்தவர்களுக்கு மிகவும் உபயோகமாகுமெனக் கருதி, அவர்களுள் சிறப்புற்றவளான நைதிங்கேல் என்பவளுடைய வரலாற்றை ஒருவாறு அடியில் எழுதுகிறோம்:—

உலகத்தில் ஒருவர்க்கு உபசாரம்செய்வதே கடினமானது; அதினும் நோயாளிகளுடைய பக்கத்திலிருந்து அவர்களுடைய மனதுக்கிசையப் பத்தியம் பரிகாரங்கள் கொடுத்து அவர்களை அன்பாய் ஆதரிப்பது மிகக் கடினமானது. வியாதியினும் தலைநோய் காய்ச்சல் முதலியன அத்தனை வருத்தமானவை அல்ல; கை கால் முதலிய உறுப்புகள் அறுப்புண்டு எழுந்திருக்கத் திராணியற்று உடம்பெல்லாம் புண்பட்டுப் பரிதபிக்கின்றவர்களைப் பரிவுடன் காத்துக்கொண்டிருப்பது மிகவும் கடினமானது என்பது யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. இப்படிப்பட்ட கடினமான காரியங்களையும் கைகூசாமல் செய்து புகழ்பெற்றவள் இப்பெருமாட்டி.

இவள் 1820-ஆ பிளாரென்ஸ் நகரத்தில் பிறந்தவள். இது காரணமாக இவளுக்கு பிளாரென்ஸ் நைதிங்கேல் (Florence Nightingale.) என்வும் பெயர் வழங்குகின்றது. இத்தாலியாவிலுள்ள பிளாரென்ஸ் நகரத்தில் பிறந்தவளாலும் இங்கிலாந்திலுள்ள டர்பி என்னும் மாகாணத்திலேயே குடியாயிருந்தாள். உபத்திரவப்படுகிறவர்களுக்கு உபசாரம்செய்வதிலேயே அவளுக்கு எப்போதும் விருப்பம் அதிகம். ஆதலின் அத்தொழிலை ஒழுங்குபட விருத்திசெய்வித்து நோயாளிகளுடைய வருத்தங்களைத் தணிக்கவேண்டுமென்று அதற்காகவே அவள் வெகுவாய்ப் பாடுபட்டாள்.

ஐரோபபாவிலுள்ள ஜர்மனிதேசத்தில் ரைன் என்னும் நதிக் கரையில் ஒரு சிறு கிராமத்திலே பெரிய கட்டடமொன்றுண்டு. அது ஸ்திரீகள் நோயாளிகளை உபசரிக்கும் தாதித்தொழில கற்கப் பழகுமிடம். அந்தக் கிராமத்திலும் சுற்றுப்பட்ட கிராமங்களிலும் உள்ள நோயாளிகளெல்லாம் அவர்களுடைய உபசரணையைப் பெறும்படி அவ்விடத்துக்கு வருவார்கள். அப்படிப்பட்ட தொழில பயிலுமிடம் இங்கிலாநதிலே கிடையாது. ஆனதுபற்றி ஜர்மனி தேசததிலுள்ள தாதிதொழில் பயிற்சிசாலைக்குச் சென்று நைதிங்கேல் பெருமாட்டி 1851-ஞுத்தில் அவ்விடததிலே மூன்றுமாத காலம் வேலைசெய்துவந்தாள். அம்மூன்றுமாதமும் அவளுக்கு வெகு சந்தோஷமான மாதங்களாயிருந்தன. அங்கிருந்த காலத்தில் நோயாளிகளை உபசரிப்பதாகிய தாதித்தொழிலுக்கு அவர்கள ஏற்படுததிய சிறந்த விதிகளைக் கற்றறிந்து, பெரிய வைத்திய சாலைகளில் நோயாளிகளை உபசரிக்கும் தாதியாய் இருந்து நிர்வகிக்கும் விதம் இப்படிப்பட்டதென்பதையும் நன்றாய்த் தெரிநது கொண்டாள். அங்கிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பிவந்தபிறகு அவ்விடததிலே லந்தன்நகரத்திலுள்ள ஸ்திரீகள் வைத்தியசாலைக்குத் தலைவளாய் அமாந்தாள்.

அவள் செய்த நற்செய்கைகளை எடுத்துரைப்பதற்கு முன்ன தாய்த தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமொன்றுண்டு; அதைக் கொஞ்சம் கவனமாய்க் கேளுங்கள்.—

ஐரோப்பாவிலே பல வருஷகாலமாய் ருஷியாதேசத்தார்க்கும் துருக்கிதேசத்தார்க்கும் கலகம் நடந்துகொண்டேயிருந்தது. கடைசியில் ருஷியர் துருககியின்மேல் படையெடுத்துச் செல்ல, துருக்கியரும் அவாகளை எதிர்க்க, அவ்விருதிறத்தார்க்கும் போா உண்டாயிற்று. இப்போர் உண்டாவதற்கு முன்னமே ஒரு சமயத தில் அங்கிலேயரும் பிரான்சியரும் துருக்கியர்க்குப் பிறர் உதவி வேண்டியிருக்கும்பக்ஷத்தில் அக்காலத்தில் தாங்கள் தடையின்றி வந்து கைகொடுப்பதாக உறுதிமொழி கொடுத்திருந்தனர். இப்பொழுது துருக்கியர்க்கு உதவி அவசியமல்லவா? ஆதலின் அச்செய்தி கேட்டவுடனே அங்கிலேயரும் பிரான்சியரும் எவ்விதமாவது அவாகளுககுப் போா உண்டாகாமல் சமாதானப்படுத்தவேண்டுமென வெகு துரிதமாக நீராவிக்கலங்களை ஓட்டிக்கொண்டு முன்னும பின்னுமாய்க் கருங்கடலிற் புகுந்து சமாதானம் பேசப் பார்த்தார்கள்; கூடாமற்போயிற்று. அதனால் அவவிருவரும சண்டைக்குவேண்டிய சேனைகளை அனுப்பினார்கள்.

இவர்களுக்குப் போர் நடந்தவிடம யாதெனபீர்களோ? ருஷியாதேசத்துககுத தெற்கே கிரிமியா என்று ஒரு பரியாயத்தீவு உண்டு, அந்தத் தீவிலேதான் இப்போர் நடந்தது. அந்தத் தீவின் பிரதான நகரமாகிய ஸிபாஸ்தபூல் பட்டணததைப் பிடிததுக்

கொண்டால் பிறகு கருங்கடலில் ருஷியருடைய பலம் ஓங்கமாட்டாது எனத் தெரிந்து, துணையாய் ஒன்றுகூடிய அங்கிலேயர் பிராஞ்சியர் துருக்கியர் இம்மூவருடைய சேனையும் முதலில அப்பட்டணத்தையே தாக்கவேண்டுமென்று அதை நோக்கிச் சென்றன. அப்பட்டணத்துக்கு அருகில் ஒரு நதி பெருகுகின்றது; அதற்கு இப்புறத்தில் இச்சேனைகள் நின்றன. ருஷியருடைய சேனை எதிர்க்கரையிலே உயரமான கற்குன்றின்மேல் வெகு பராக்கிரமத்துடன் வந்து நின்றது. தாங்கள் பீரங்கி வெடிதீர்த்துக்கொண்டே இருக்க அதை எதிர்த்துக்கொண்டு அங்கிலேயரும் பிரான்சியரும் துணிந்து அந்நதியைத் தாண்டிவரமாட்டார்கள் என்று நினைத்து ருஷியர் தைரியமாயிருந்தனர். ஆயினும் அவர்கள் இதற்குச் சலிப்பவர்களல்லர். சேனை ஆற்றைக்கடந்து செல்லும்படி உத்தரவுபிறந்தது. உடனே அப்படையாட்கள் வெகு தைரியமாய் அவ்வாற்றிலிறங்கி அதைக் கடந்து சென்று எதிர்க்கரைசேர்ந்து ருஷியர்களுடைய பலமான பீரங்கி வெடிகளுக்கும் பின்வாங்காமல் அங்கிருந்த மேட்டுத்தாக்கில் ஏறினார்கள். ருஷியர்களும் வெகு தைரியசாலிகளேயாயினும், செம்மையாக நடத்தப்படாமல் 'சேனாபதியில்லாத சேனை பாழ்' என்றபடி தோற்றுப் பகைவர்களுக்குப் புறங்காட்டி ஓடிப்போயினர். அங்கிலேயர் வெற்றிபெற்றனர். அவர்கள் ஜயபேரியடித்து சந்தோஷத்தால் இரைந்த இரைச்சல் தோற்று ஓடுகின்ற ருஷியருக்கு எரிகிற உடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினதுபோலிருந்தது. அங்கிலேயப் படையாட்கள் இவ்வாறு வெற்றிபெற்றார்களாயினும், அவர்களில் கொலையுண்டவர்களும் காயப்பட்டவர்களுமாய் மூவாயிரம்பேர் போர்க்களத்தில் விழுந்துவிட்டார்கள்.

இப்படி ஜயம்பெற்ற சந்தோஷசமாசாரம் வந்தபோது இங்கிலாந்தில் அனைவரும் பேரானந்தமடைந்தார்கள். ஆயினும் அவ்வானந்தத்தோடுகூடக் கொஞ்சம் துக்கமும் கலந்தது; ஏனெனின், போர்க்களத்தில படையாட்கள் அநேகர் படுகாயம்பட்டு மிகவும் பரிதபித்துக்கொண்டிருந்தார்கள். அந்த ரணகளத்தில அடிபட்டவர்களுக்கு மருந்துவைத்து காயமகட்டி அவர்களை வைத்தியசாலைகளுக்கும் கூடாரங்களுக்கும எடுத்துக்கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்று அங்கிருந்த வைத்தியர்கள் இரவெல்லாம் பாடுபட்டுப் பார்த்தார்கள், அவர்களால் சாத்தியப்படவில்லை. அந்த அமர்க்களத்தில எண்ணிறந்தபேர்கள் அடியுண்டு விழுந்துகிடக்கிறார்களே, அத்தனைபேர்க்கும் வைத்தியம்செய்யப் போதுமான வைத்தியர்களில்லை; வைத்தியர்கள் சொல்லுகிறபடி நோயாளிகளை உபசரித்துக்கொண்டு வைத்தியசாலையைக் காத்துக்கொள்ளத்தக்க தாதிமார்களுமில்லை. ஆகவே வைத்தியர்களும் தாதிகளும் விசேஷமாய் வேண்டுமென்ற கூச்சல் உடனே இங்கிலாந்திலே போய்ச

சேர, தக்ஷணமே அவர்கள் அதற்குப் பதில் அனுப்பினார்கள். அத்தேசத்து ஸ்திரீகள் அநேகர், தாங்கள் அவ்விடத்துக்குச் சென்று அங்கே அடிபட்டு விழுந்துகிடக்கிற படையாட்களுக்குப் போதுமான உபசாரமசெய்வதாக திணைகளததாரைக் கேட்டுக்கொள்ள, அவர்கள அப்படியே ஆகட்டுமென்று அதை அங்கீகரித்தார்கள்.

அப்படி தாமே வேண்டிக்கொண்டவாகளுள் நைதிங்கேல பெருமாட்டி முதன்மையானவள். இவ்விஷயத்தில் அவள் நன்றாய்ப பழகித் தேறினவளென எங்கும பிரசித்தமாய்த் தெரியுமாகையால் அவளிடத்தில் நம்பிக்கைகொண்டு மற்றெல்லாத் தாதிமாருக்கும் அவளே தலைமையாயிருக்கும்படி ஏற்பாடுசெய்தனர். இவ்விஷயத்திற்காகத் தாமே விண்ணபபம்செய்து வேண்டிக் கேட்டுக்கொண்டவர்கள் அநேகம்பேர். ஆனபடியினால அவர்களுள் தகுந்தவர்களாய்ப் பார்த்துத் தமக்கு வேண்டியவர்களைத் தேர்ந்து எடுத்துக் கொள்வதே மிகக் கடினமாயிருந்தது; கடைசியில் எப்படியோ அக்காரியம் நிறைவேறிறறு. உடனே ஒருநாள் நைதிங்கேல் பெருமாட்டி முப்பத்தேழு தாதிமாாகளுடன் கூட இங்கிலாந்தின் தென்கீழ்த திசையிலுள்ள போக்ஸ்டன் துறையில் நீராவிக்கலமேறிக் கடலில் கிழக்குமுகமாய்ச் சென்றாள். தென்கிழககுமுகமாகச் சென்று பிரானசுதேசத்து பொலோன் துறையிலிறங்கி அத்தேசத்தவர்களால் வெகு மேன்மையாகக் கொண்டாடப்பட்டு மறுபடி பிரான்சு தேசத்துத் தென்கிழக்கு மூலையிலுள்ள மாாஸெயில்ஸ் நகரத்தில் கப்பலேறி அங்கிருநது கான்ஸ்தாந்திநோபில்நகரம் போய்ச் சேர்ந்தாள். பிரான்சுதேசததார் அடிபட்டுப் புண்பட்ட தங்கள் தேசத்துப் படையாட்களுக்கு வேண்டிய பரிசாரகப்பெண்களை முன்னமே அனுப்பிவிட்டாாகள்.

நைதிங்கேல் பெருமாடடி போய்சசேர்ந்த தினத்தில் ஒரு மகா யுத்தம் நடநதது. ஆயினும், அவ்வுயுத்ததத்தில் பிசகான கட்டளையொன்று பிறந்ததனால் அங்கிலேயப் படைவீரர்கள் அநேகர் உயிா இழந்துபோயினர். அதுபற்றி மறுநாளும் பெரும்போர் ஒன்று நடத்தப்பட்டது. அன்று காலையில் மூடுபனி நன்றாய் மூடிக்கொண்டிருந்தது. பக்கததிலிருப்பவர்களுக்குககூட ஒருவர் முகம ஒருவர்க்குத் தெரியவில்லை. அன்று காலையில் ருஷியர்கள் தங்கள் புறத்தில் வெற்றியுண்டாவது நிச்சயமெனத்துணிந்து செவ்வையாய் உதயமாவதற்கு முன்னமே அங்கிலேயர் தளமிறங்கியிருந்த மேட்டுத் தாக்கை நோக்கி எதிாத்துச் சென்றார்கள். அங்கிருந்த அங்கிலேயப் படை மிகவும் சொற்பம். மூடுபனியினால் ருஷியாகள் நெருக்கமாய் வந்து தங்களைச சூழ்ந்துகொள்ளுமளவும் அவர்கள் வருவதைப் பற்றி அங்கிலேயர்க்கு யாதொன்றும தெரியாமலேயிருந்தது. உடனே சண்டைக்கு ஆரம்பமாக, அங்கிலேயப் படையாட்கள் வெகு தைரியமாய் எதிர்த்துத் தாங்களிருந்த குன்றின்மேல் ருஷி

யர்கள், ஏறிவரவொட்டாமலே தடுத்துக்கொண்டிருந்தார்கள். அன்று முழுதும் அச்சண்டை ஓயவேயில்லை. கடைசியில் அங்கிலேயப் படைவீரர்களெல்லாம் ஓய்ந்துபோகிற தருணத்தில் பிரஞ்சுப் பட்டாளம் ஒன்று வந்துசேர, அவர்களால அடிபுண்டு எதிர் நிற்கமாட்டாமல் ருஷியர்களெல்லாம் ஓடிப்போனார்கள். இந்த யுத்தம் சேனாபதிகள் சேர்ந்து அல்ல; கேவலம படையாட்களே சொற்பமாய்க் கூடிப்பெற்ற ஜயமாகையால் பேதாமாற்று என்று இதை விசேஷமாய்க் கொண்டாடுவார்கள்.

இந்த யுத்தங்களில் காயப்பட்ட படையாட்களை அருகிலுள்ள ஸ்குத்தேரிபட்டணத்து வைத்தியசாலைக்குக் கொணடுபோனார்கள். அப்பொழுதுதான் அவ்விடத்துக்கு நைதிங்கேலும் போய்ச்சேர்ந் தாள். அவ்வைத்தியசாலையிலே போரில் புடைபட்டுப புண்ணுன வர்கள் முன்னமே நிறைந்திருந்தார்கள். அந்த நோயாளிகளின் தொகை இரண்டாயிரத்துக்குக் குறைவில்லை; இரண்டு மைல் தூரம் நோயாளிகளுக்குப் பாய்கள் போட்டிருந்தன. இந்தப் புதுயுத் தத்தில் காயம்பட்டவர்களும் அவ்விடம் போய்சசேர, இவாக ளுககு இடமகப்படாமல், முன்புறத்திலிருந்த கூடத்திலும் தாழ் வாரங்களிலும் நடக்கிறபாதைகளிலும் நெருக்கமாய் அவாகளைப படுத்திருக்கச் செய்தார்கள்.

நைதிங்கேலும் அவளைச்சேர்ந்த பல தாதிமார்களும் தங்களுக்கு உபசரிக்க வருநதைப்பாாக்க அந்நோயாளிகளுக்கு வெகு சந்தோ ஷம் உண்டாயிற்று. அதுவரையில் அவாகள் ஒருநாளும் வைத்திய சாலையில் ஸ்திரிகளால் உபசரிக்கப்பட்டதில்லை; எல்லாம் புருஷர் களாலேதான். அநதப் புருஷர்களுள் அநேகர் மிகவும மூடாகள்; சிலா நோயாளிகளின் வருததமும் நோயின்தனமையும் தெரியாமல் புண்களுக்குத் தக்கபடி மருநது வைத்துக்கட்டி உபசாநதிசெய்யத் திறமையற்றவர்களாயிருநதனா. இப்பொழுதுவந்த இந்தத் தாதிமாா களோ அப்படியில்லை; வெகு ஆதாவாய் ஒவ்வொரு நோயாளியினு டைய படுக்கையண்டையிலும் சாந்தமாயும் துரிதமாயும போய் அவாவர்க்கு வேண்டியபடி ஓய்ச்சல் ஒழிவில்லாமல் உழைத்தார் கள். சில படையாட்கள் தாங்கள் படுத்திருககுமிடம் இன்ன தென்பதுகூடத் தெரியாமல் அவ்வளவு பிரஞ்ஞைதப்பி விழுந் திருந்தனா; இவாகள் போய்த் தக்கபடி வேண்டிய உபசாரங்கள் செய்தபிறகு அவாகள் கொஞ்சம பிரஞ்ஞைவநது, தாம் அப் போது படுத்திருக்குமிடம் போாக்களமல்ல; வைததியசாலை யென்றும், நைதிங்கேல பெருமாட்டியோ அவள்வகையிற் சேர்ந்த வேறு யாரோ ஒருவரால் தாம் கவனமாய்ப் பாாத்து உபசரிக் கப்பட்டு வருகிறார்களென்றும் தெரியவந்தது. அப்போது அந் தத் தாதிமார்களுக்கு உண்டான வருததம் இவ்வளவவ்வள

வல்ல; அங்கே அவர்களுக்குச் செவ்வையான உணவு கிடைக்கவில்லை. அந்தத் துருக்கிதேசத்து ரொட்டி வாயில் வைக்கக்கூடாதபடி அவ்வளவு புளிப்பாயிருந்தது, வெண்ணெயும் நல்லதாய்க் கிடைக்கவில்லை. மாமிசமோ மாட்டுத்தோல்போல் இருந்ததென ஒருவர் சொல்லுகிறார்.

எது எப்படியிருந்தாலும் தாதிமார்கள் இராப்பகல் ஓயாமல் வேலை தவறாதபடி நோயாளிகளுக்கு மருந்துகொடுப்பதும் காயங்களுக்குக் கட்டுகட்டுவதும், அவரவர்க்குத் தாகமெடுக்கும் வேளையில் தண்ணீர் முதலியவை கொடுத்து உபசரிப்பதுமாய் வைத்தியர்களுடைய உத்தரவுதப்பாமல் அக்காரியங்களை நடத்திக்கொண்டிருந்தார்கள். ஒரு நோயாளியினிடமிருந்து மற்றொரு நோயாளியின் இடத்திற்குப் போக இடையே வழிகூடக் கிடையாது. அவ்வளவு நெருக்கமாய் அவர்கள் படுத்திருந்தார்கள். இருக்கிற சொற்ப இடத்தில் அங்கங்கே வைத்தியர்கள் கூட்டங்கூட்டமாய்க் கூடித் தங்களால் குணப்படுத்தக் கடினமாயிருக்கின்ற நோயாளிகளின் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் கொஞ்சம் கைகால் சுவாதீனமான சில நோயாளிகள் மெல்ல எழுந்து தம் நேசன் ஒருவனண்டை போய் அவனுக்குப் பொழுதுபோக்காய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

அப்பொழுது பனிகாலமாகையால் குளிர் சகிக்கக்கூடாமல் மிகவும் அதிகமாயிருந்தது. யுத்தத்தில் உயிர்தப்பித் தாம் தளம் இறங்கியிருந்த குன்றின்மேலேயே நின்ற மற்றப் படையாட்களுக்கு உணவும் செவ்வையாய்க் கிடைக்கவில்லை; மேலே போர்வைக்குக் கந்தைத்துணி தவிர நல்ல ஆடையில்லை. கீழேயும் சில்லென்று குளிர்ச்சியான தரையிலேயே படுக்கவேண்டியிருந்தது. இந்த வருத்தங்களால் அவர்களுள் அநேகர் இறந்துபோனார்கள். மிகுந்தவர் நோய்கொள்ள, அவர்களையும் வைத்தியசாலை கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இவர்களுக்கெல்லாம் மொத்தமாய்ப் பெரிய மடைப்பள்ளியில் சமைக்கிற சமையல் போதாமல், கொடுமையான நோயில் வருந்துகிறவர்களுக்கு வேண்டிய பத்தியங்களைத் தாதிமார்கள் தனியே சமைத்துக்கொள்ளவேண்டியிருந்தது. மிகவும் அவசியமாயிருந்தால் நைதிங்கேல் தானும் தன் கையால் சமைத்துத் தன் கையாலேயே அநேகர்க்கு உணவு ஊட்டுவாள். அந்த நோயாளிகளுக்கு அவளிடத்தில் அதிகமான நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை மிகக் கொடுமையான விரணவைத்தியங்கள் செய்துகொள்ளவும் காயப்பட்ட நோயாளிகளுக்குத் துணையாயிற்று. எப்படியெனில், விரணவைத்தியருடைய கத்தியின் வேதனையைப் பொறுப்பதிலும் பிராணனை விடுவதே மேலென்றிருப்பவர்களெல்லாம் நைதிங்கேல் தைரியஞ்சொல்லிப் பக்கத்திலே வந்து நிற்பாளானால் எவ்வளவு கொடுமையான சிகிச்சையாயிருந்தாலும் அவளுக்காகப்

பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திருப்பார்கள். அவள் நோயாளி களைப் பார்த்துக்கொண்டு போம்போது எப்பொழுது தன்னிடம் வரப்போகிறுளென்று ஒவ்வொருவனும் அதிக ஆவலாய் அவளையே பார்த்துக்கொண்டிருப்பான். பலவாறு சொல்லியென்ன? ஒவ்வொருவனும் அவளைத் தெய்வமாகவே நினைத்து அவள் சொல்லுகிற படி கேட்டு அவளுக்குக் கீழ்ப்படிந்திருந்தனன். அவள் ஒருத்தி இல்லாவிட்டால் அந்த நோயையும் அவர்கள் அனுபவியார்கள்; வைத்தியத்தின் கொடுமையையும் பொறுத்திருக்கமாட்டார்கள்.

இந்த நோயாளிகளைப்பற்றி எப்பொழுதும் அவள் சொல்லிச் சந்தோஷிக்கிற விஷயமொன்றுண்டு. அதாவது, எக்காலத்திலும் துர்ப்பாஷையாய்ப் பேசுவதும் பிரமாணங்கள் செய்வதுமே வழக்கமாகக்கொண்ட அந்தப் படையாட்கள் அத்தனை கொடுமையான வேதனைகளை அனுபவிக்கையிலும் தான் போயிருந்தகாலத்தில் ஒரு சமயத்திலும் துர்ப்பாஷையான பேச்சு ஒன்றுகூடப் பேசினதில்லையென்று சொல்லி அதை நினைக்கும்போதெல்லாம் கண்ணீர் உகுப்பாள். அந்த வைத்தியசாலையில் அவள் நோயாளிகளுடைய சவுக்கியத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் அநேகம் செய்தாள். முதலில் அவள் போனபோது அங்கே துணிகளை வெளுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு ஒன்றும் செவ்வையாயில்லை. அதற்குவேண்டிய ஒழுங்குபாடுகளெல்லாம் செய்து சீர்ப்படுத்தினுள்.

இப்படியிருக்க இங்கிலாந்திலிருந்து விக்டோரியா மகாராணியார், அப்படைவீரர்களுடைய பராக்கிரமத்தையும் தேசாபிமானத்தையும் கொண்டாடி அப்போது அவர்களுக்கு நேர்ந்திருக்கிற துன்பத்திற்காகத் தாம் இராப்பகல் அதே நினைவாயிருப்பதாய் அடியுண்டு விழுந்துகிடக்கிற நோயாளிகளுக்குச் சொல்லும்படி நைதிங்கேலுக்குக் கடிதமொன்று எழுதினுர்கள். அதைக் கேட்டபோது அந்த நோயாளிகளுக்கு வெகு சந்தோஷமாயிருந்தது.

இப்படி உடம்பெல்லாம் புண்பட்டு வேதனை அனுபவிக்கையில் இங்கிலாந்து சமாசாரபத்திரிகையைப் பார்ப்பதென்றுல் அவர்களுக்கு வெகு சந்தோஷம். சமாசாரபத்திரிகை வந்தவுடனே, ஒரு கை மொண்டியோ ஒருகால் மொண்டியோ தலையில் வெட்டுண்டவனே, யாரோ ஒருவன் மத்தியில் நின்று அதைப் படிக்க, மற்றவர்களெல்லாம் சுற்றிலுமிருந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். அந்தப் போர் இன்னும் முடிவுபெறுமல் நடந்துகொண்டிருந்ததனுல் அதன் செய்தியையே அதிக ஆவலாய்ப் பார்ப்பார்கள். இப்படியிருக்க ஒரு பத்திரிகையில் ருஷியாதேசத்தரசனுன நிகலஸ் இறந்துபோனுன் என்று இருந்தது. அச்செய்தியைக் கேட்டபோது எழுந்திருக்கச் சக்தியற்றுப் படுக்கையோடு படுக்கையாய் விழுந்துகிடந

தவர்கள்கூட மெல்லத் தலையைத் தூக்கிக் கைகொட்டி, இன்றுதான் நாம் நல்லசெய்தி கேட்டோம் என்று சந்தோஷித்தார்கள்.

இக்காலங்களில் அதிகமாய் உழைத்து வேலைசெய்யவே நைதிங்கேலுக்கு தேகம் தாளாமல் குளிர்காய்ச்சல் உண்டாயிற்று. அதனால் அவள் அவ்விடத்தில் வெகு துன்பங்களை அனுபவித்தாள். காய்ச்சல் கொஞ்சம் குணப்பட்டு எழுந்து நடக்கச் சக்தியுண்டானவுடனே அவளை இங்கிலாந்துக்கு அனுப்பினார்களாயினும், இந்த நோயாளிகளுடைய சிந்தையே மனதில் குடிகொண்டிருந்ததனால், அவ்விடத்திலிருக்கப் பொறாமல் உடம்பு செவ்வையாய்ச் சொஸ்தப்படாமல் பலஹீனமாயிருக்கையிலேயே மறுபடி அவள் அவ்விடம் வந்து சேர்ந்தாள். பின்பு யுத்தங்களெல்லாம் ஓய்ந்து அங்கிலேயர் துருக்கியைவிட்டுப் போமளவும் அவள் அவ்விடத்திலேயே இருந்தாள். அவள் சுதேசத்துக்கு வரும்போது வெகு மரியாதையாய் வரவழைக்கவேண்டுமென இங்கிலாந்து தேசத்தார் அபேக்ஷை கொண்டார்கள். ஆயினும் அவள் அதற்குச் சம்மதிக்காமல் அடக்கமாய்த் தன் ஊர்போய்ச் சேர்ந்தாள்.

ஆனாலும் அவர்கள் அவள் செய்த உபகாரத்தை அவ்வளவோடு மறந்துவிடவில்லை. அவள் விஷயத்தில் தங்களுக்குள்ள நன்றியறிதலை ஏதாவது ஒருவழியில் வெளியிடவேண்டுமென்று ஆலோசித்து, அதற்காக யாவரும் கையொப்பம்செய்து "நைதிங்கேல்நிதி" என்று ஒரு நிதி ஏற்படுத்தும்படி நிச்சயித்தார்கள். அச்செய்தியைக் கேட்டவுடனே யாவரும் அதில் கையொப்பக்காரராய்ச் சேர்ந்துகொண்டனர். காயப்பட்டவர் காயப்படாதவர் ஆகிய எல்லாப் படையாட்களும் வெகு சந்தோஷமாய்த் தங்களாலியன்றமட்டும் அதற்குக் கையொப்பம்செய்தார்கள். தன் தேகசௌக்கியத்தையும் பாராமல் பரோபகாரத்திற்காக அத்தனையாய்ப் பாடுபட்டாளென்பதற்காக யாவரும் அவளை அதிகமாய்க் கொண்டாடினார்களென்பது இதனால் தெளிவாகின்றது. இவ்வாறு தங்களுக்குள்ள நன்றியறிதலை வெளியிடும்பொருட்டு அவர்கள் சேகரித்துக்கொடுத்த பொருளை அவள் தனக்கு உபயோகித்துக்கொண்டாளோ, இல்லை; லந்தன்நகரத்தில் தாதிமார்களைப் பழக்கும்படியான பாடசாலையொன்றுகூட இல்லாமைபற்றித் தனக்காகச் சேகரித்த அப்பொருளைக்கொண்டு லந்தன் வைத்தியசாலையில் தாதித்தொழில்பயிற்சிப் பாடசாலையொன்று ஸ்தாபிக்கும்படி வேண்டிக்கொண்டாள். அவள் வேண்டுகோளின்படியே அத்தன்மையான பாடசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

இதுமாத்திரமேயன்றி விக்டோரியா மகாராணியார் அழகிய பதக்கமொன்று அவளுடைய பெருமைக்குப் பரிசாகக் கொடுத்தனர். அதன் ஒரு புறத்தில் 'கிரிமியா' என்றும், மற்றொரு புறத்தில் "தம்முடைய போர்வீரர்களைக் காப்பாற்றும்பொருட்டு அவா

கள் விஷயத்தில செய்த உபகாரத்தை நன்குமதித்து பிளாரென்ஸ் நைதிங்கேலுக்கு விக்டோரியா நன்றியுணர்ச்சிக்கு அறிகுறியாய் அளித்தது" எனும் கருத்துள்ள மொழிகளும் பதிப்பிக்கப்பட்டிருந்தன.

பின்பு அப்பெருமாட்டி தாதித்தொழில் பயிற்சியைப்பற்றிப் புத்தகமொன்று எழுதினாள். அதில் நோயாளிகளைத் தகுந்தபடி உபசரியாமையால் விளையும் தீமைகளைப்பற்றித் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறாள். நோயாளிகளை உபசரிக்கப் பயிலாத பெண் உபயோகமற்றவள் என்பது அவளுடைய கொள்கை. நோயாளிகளிடத்தில் அவளுக்குள்ள அபிமானம் அத்தன்மையானது. நைதிங்கேலைப்பற்றி எழுதும்போது ஒரு கவி, ஒருநாள் வைத்தியசாலையில் அர்த்தராத்திரியிலே கையில் சிறிய தீபமொன்று எடுத்துக்கொண்டு மெதுவாய்ப் படுக்கைதோறும் பார்த்துக்கொண்டு போனதாகவும், அப்பொழுது எழுந்து பேசமாட்டாமல் படுத்திருந்த ஒருவன சுவரில் தோன்றிய அவள் சாயையை முத்தமிடத் தலையெடுத்ததாகவும் சொல்லிக் கடைசியில, உலகத்தில் இவள் எல்லாப்பெண்களுக்கும் மேல்வரிச்சட்டமாக நடந்து காட்டியிருக்கிறாள் என்கிறார்.

விசித்திர வர்த்தமான பத்திரிகைகள்.

1828-ம் வருஷம் அமெரிக்காகண்டத்திலே விசித்திரமான சமாசாரபத்திரிகையொன்று பிரசுரஞ்செய்யப்பட்டது. அங்கிலேய துரையொருவர் கையில் ஓர் வர்த்தமான பத்திரிகையெடுத்துக் கடகடவென்று வாசித்துச் சங்கதிகளை எளிதில் அறிந்துகொண்டு ஆனந்தப்படுவதைக்கண்ட ஓர் அமெரிக்கன் தானும் அவ்வாறு செய்ய வேண்டுமென்று ஆசைகொண்டு, தானாக நெடுங்கணக்கொன்றைப் புதிதாய் உண்டாக்கி, அதைத் தன்னாட்டார் எல்லோருக்கும் கற்றுக்கொடுத்தான். எழுத்து இவ்வாறிருக்குமென்று எப்பொழுதும் அறியாத காட்டுசாதிக்குள் இவ்வாறு நூதனமாய் எழுத்து ஏற்படவே, 1835-ம் வருஷம் ஸாண்ட்விச் தீவு பத்திரிகையென்று பேர்கொண்ட பத்திரிகையொன்று பிரசுரஞ்செய்யப்பட்டது. இதைப் பிரசுரஞ்செய்யும்படி அவன் அரசனை அநுமதிகேட்க, அவ்வரசன் மனமுவந்து உத்தரவுகொடுத்தான். இது எட்டாக மடித்ததான பத்திரிகை. அக்காலத்திற்குப்பின்பு இவ்வுலகத்திலே பற்பல தேசங்களில் ஏற்பட்டு இப்பொழுது பிரசுரஞ்செய்யப்பட்டு வருகின்ற பத்திரிகைகள் இவ்வளவவ்வளவென்றல்ல. இப்பொ

பூரா இந்தியாவிலே வெவ்வேறான பாஷைகளில் பிரசுரஞ்செய்யப்பட்டுவருகின்ற பத்திரிகைகள் முன்னூற்றுமுப்பதிற்கு மேற்பட்டிருக்கின்றன. இவற்றின் பிரதிகள் மொத்ததத்தில் லட்சத்திற்கு மேற்படும்.

சீனதேசத்திலே 911-ம் வருஷத்தில் ஓர் பத்திரிகையைப் பிரசுரஞ்செய்யத் தொடங்கினார்கள். அது 1351-ம் வருஷம் வரையினும் ஒழுங்கின்மையாய்ப் பிரசுரஞ்செய்யப்பட்டுவந்ததெனினும், அதுமுதல் கிரமமாய் நடந்துவருகின்றது. இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டுமுதல் அந்தப் பதகிரிகை தினவர்த்தமானியாய் நாடோறும் பிரசுரஞ்செய்யப்படுகின்றது. பிரதியொன்றுக்கு விலை நான்கு பைசா. சீனசக்கரவர்த்தியின் உத்தரவுபபடி அப்பத்திரிகையானது சிறிதுகாலந்தொட்டு தினத்துக்கு மூன்று பதிப்பாகிறது. காலைப்பதிப்பு மஞ்சட்கடிதாசியில வர்த்தகவிஷயங்கள் அடங்கியிருக்கும்; மத்தியானப்பதிப்பில் ராஜாங்கவிஷயங்கள் அடங்கியிருக்கும்; அந்திப்பதிப்பு சிவப்புத்தாளில், காலைப்பதிப்பு, பகற்பதிப்பு இவ்விரண்டிலுமுள்ள செய்திகளின் சுருக்கமேயன்றி வேறு பல விஷயங்களும் அடங்கியதாயிருக்கும். இப்பதகிரிகைக்கு எழுதுபவர்களில் முக்கியமான ஆறுபேர் அனைத்தனசாஸ்திரவித்தியாபாரகர்களேயாம். அதில் சுமார் பதினாலாயிரம் பிரதிகள் செலவாகின்றன. பேர்பெற்ற சில பத்திரிகைகளுக்காக எவ்வளவோ பெருந்தொகைகள் செலவழிக்கப்படுகின்றன.

அமெரிக்காவில் ஓர் பத்திரிகைக்காக நீராவிக்கலமொன்று தனியே வாங்கப்பட்டு அதிலேயே அப்பத்திரிகை அச்சிட்டுவரப்படுகின்றது. பத்திராதிபா முதலானோர் இதிற்றானே வசிப்பார்கள். இந்நீராவிக்கலம் ஓடிக்கொண்டவாக்கிலே அங்கங்கே நடக்கிற விஷயங்களைக் கண்கூடாய்க் கண்டுபிடித்து அவைகளைக் காலதாமதமின்றி எழுதிக்கொண்டுபோகும். ஏதேனும் முக்கியமான காரியங்கள சம்பவித்தால், அவ்விடங்களுக்கு நேரில்சென்று சங்கதிகளைக்கண்டு விஸ்தாரமாய் அறிவிக்கும். இக்கலமானது முக்கியமாய், மெம்பிசுக்கும் நியுஆரிலான்சுக்கும் போக்குவரவாய்ப் பத்திரிகைகளை அங்கங்குள்ளவாகளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்துக்கொண்டே, மிஸிஸிபிநதிக்கரையோரமாயுள்ள நாட்டுவிருத்தாந்தங்களையும் ஐயந்திரிபற நேரில் கேட்டு எழுதிக்கொண்டுபோகும். முன்னே 67-வது பட்டாளம் இங்கிலாந்திலிருந்து பர்மாவுக்குப புறப்பட்டுப் போகும்போது, வழியில் நடக்கிற சங்கதிகளையெல்லாம் அவ்விடம் சேர்வதற்குமுன்னமே எழுதி அச்சிடவேண்டுமென்று, எழுத்து யந்திரம் முதலிய அச்சிடுங்கருவிகளை முன்னமே வாங்கி வழியில் அப்படியே செய்துகொண்டுபோய், ரங்கூனிலிறங்கினவுடனே பிரசுரஞ்செய்தார்கள். அப்பத்திரிகைக்கு எழுதியவர் அச்சடிக்குவோர் முதலிய யாவரும் அந்த இராணுவத்தைச் சேர்ந்தவர்களேயாம். இவ்

வாறே இராணுவவார்த்தமான பத்திரிகையொன்று பிலடேல்பியா சண்டை நடந்தகாலத்தில் பிரசுரஞ்செய்யப்பட்டுவந்தது.

அமெரிக்காவானது எல்லாம பெரியபொருள்கள் நிறைந்த நாடெனவே பிரசித்திபெற்றிருந்தாலும், சமாசாரபத்திரிகை விஷயத்தில் மாத்திரம் மிகச் சிறியபத்திரிகை உடைமைக்காகவே பேர்போனதாயிருக்கின்றது. அங்கே மிகச் சிறிதான பத்திரிகையொன்று உண்டு. அவ்வளவு சிறியபத்திரிகை அச்சிடப்படுகின்ற ஏற்றம் அமெரிக்கா வொன்றிற்குமட்டுமே உரியது. அந்தப் பத்திரிகைக்கு "கடுகத்துணைச் சிறிய நட்சத்திர ஒளி" என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதன் அளவு அகலத்தில் மூன்று அங்குலம்; நீளத்தில் மூன்றரை அங்குலம். இது வாரம் ஒருமுறை பிரசுரஞ்செய்யப்படுகின்றது. இதில் நான்குபக்கமுண்டு; முதலாவதுபக்கத்தில அன்னியதேசத்து வர்த்தமானமும், இரண்டாவதில, கனிகளில் உலோகங்கள் வெட்டியெடுக்கப்படுஞ் செய்திகளும், மூன்றாவது நான்காவது பக்கங்களில் நாட்டுவர்த்தமானம முதலியனவும் அடங்கியிருக்கும். இப்பொழுது அமெரிக்காவில நூதனமாய் இரண்டுபத்திரிகைகள் பிரசுரஞ்செய்யப்பட்டு வருகின்றனவென்றும், அவற்றுள் ஒன்று பஞ்சித்துணியில் கையுருமால் அளவில் வேடிக்கையாய்க் கைக்குட்டைபோல் இருக்கிறதென்றும், மற்றொன்று பட்டுத்துணியில் பொனனெழுத்தால் வெகு அழகாய்ப் பல சங்கதிகள் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறதென்றும் ஓர் பத்திரிகை சொல்லுகின்றது. இங்கிலாந்துமுதலான சில விடங்களில் வர்த்தமான பத்திரிகைகளைக கொண்டுபோவதற்கென்றே நீராவிவண்டித்தொடர்களும், நீராவிமரக்கலங்களுந தனியே பெருந்தொகைக்கு வாங்கப்படுகின்றன. இன்னும் சிறிதுகாலத்திற்குள் இதிலும் மிக்க அற்புதங்களும் நடக்கப்போகின்றன என்பதற்கு ஐயமில்லை.

ரோஜா அத்தர்.

ரோஜாமலரை ஸ்தலகமலமென்னலாம். அம்மலரினின்றும் திவ்விய வாசனையுள்ள தைலம் ஒன்று எடுக்கப்படுகின்றது. ரோஜாப்பூவை எங்கும் விளைவிக்கலாம் எனினும், நமது தேசத்திற்கு வடமேற்கிலுள்ள பாரசீகமுதலிய இரண்டொரு தேசங்களில்மட்டுமே தைலம் எடுப்பதற்கேற்றவிதமாய்ச் செழித்து வளருகின்றது. இம்மலரிலிருந்து தைலமெடுக்கவேண்டுமானால், அரும்பாடு பெரும்பாடு படவேண்டும். ஒரு ரூபாய் எடையுள்ள சுத்தமான ரோஜா அத்தர் சேகரிப்பதற்கு அதமபக்ஷம் இருபதினாயிரம் புஷ்பம்

வேண்டும்; அவ்வளவு தைலம் நூறுரூபாய் விலைபெறும். ஆயிரம் ஸத்தியஞ்செய்து அலட்டும் நாடோடி அத்தர் வியாபாரிகளிடம் குப்பி குப்பியாய் நயமாக வாங்கிவைத்துக்கொண்டு ஸ்வய அத்தர் என்று சொல்லுவதெல்லாம் வீணேயாம்; அவ்வாறான அத்தரில ஏதேனுஞ் சிறிதளவு ஸ்வயமான அத்தர் ஒருகால வாசனைக்கு மட்டும் கலந்திருக்குமேயல்லாது வேறில்லை. ஏனெனில், ஒரு ரூபாயெடையுள்ள ஸ்வயம் ரோஜா அத்தா நூறுரூபாய் விலையுள்ளதென்றால், குப்பி குப்பியாய்ச் சொற்பவிலைக்குக் கொடுக்கப்படுகிற ரோஜா அத்தரின் பெருமையை என்னென்று சொல்லலாம்! ஸ்வயமான ரோஜா அத்தரை ஒரு ரூபாயெடையளவு நூறு ரூபாய் விதம் விலைக்குவாங்கி, மீண்டும் அதைச சொற்பவிலைக்கு ஒருவன் விற்பானாயின், அவன் குபேர சமபத்துள்ளவனாயிருந்தாலும் அவன்குடி விரைவிற் கெடுமன்றோ? சந்தனக்கட்டையிலிருந்து இறக்கப்படுகிற எண்ணெயோடு ஒரு சிறு துவலை ஸ்வயம் அத்தரைவிட்டுக் கலந்துகொண்டு அதை முதற்றரமான ரோஜா அத்தரென்று ஜனங்களை வாத்தகா வஞ்சிக்கிறார்களேயன்றி அது ஒரு பொழுதும் சுத்தமான அத்தரேயன்று; ஒவ்வோர் சமயங்களில், வாசனையுள்ள வேறுவிதமான எண்ணெயோடு இபபடிக் கலப்பதுமுண்டு. ஸ்வயமான அத்தருக்குப் பேர்போன இடமாகிய காஸிபூர்முதலானவிடங்களிலும் இவ்விதமான பித்தலாட்டகம் நடக்கிறதென்றால் மற்றவிடங்களில் கேட்பானேன்? ரோஜாபுஷ்பம் புஷ்பிப்பதற்கேற்ற காலம் சரியாயிராவிட்டால், எததனையாயிரம் ரோஜாமலர் இருந்தாலும் இரண்டு கிரேன்ஸ் எடைகொண்ட அத்தர்கூடக் கிடைப்பதரிது. மததியானத்திற்கு மேல் ரோஜாச்செடிகளிலுள்ள சிவந்த மொட்டுகளைக் கையாற் கொய்து, அதற்கு இருமடங்கான எடைஜலத்தை ஓர் களிமண் பாண்டத்திலே பெய்து, அதனுடன் இம்மொட்டுகளைக் கலந்து நன்றாய்க்குலுக்கிக் கலக்கிவிட்டால் அததண்ணீர் இரவில் தன்னென்றாகி, விடிந்துபார்க்கையில், பாலில் ஆடைபுடைப்பதுபோல மேலாக வெகு நுட்பமாய் ஏடுபடிந்தாற்போலிருக்கும். இந்த ஏட்டை வெகு லாகவமாய்க் கையிலோர் இறகைப் பிடிததுக்கொண்டு அதனால் எடுத்துக் குப்பியில் விடவேண்டும். இதுதான் ரோஜா அத்தர் எடுக்குமுறை. இவ்வாறு ஒருநாளல்ல; பலநாள் பாடுபடவேண்டும். இப்படிப் பல்நாளளவுஞ் செய்துகொண்டுவந்தாலும் அத்தண்ணீரில் அத்தரின் அதிநுட்பமான திவலைகள் எடுக்க முடியாமல் தங்கிப்போம். ஒரு பெருங்கிணற்றிலே இரண்டொரு திவலை நல்லெண்ணெயை விட்டால் அது அக்கிணறெங்கும்பரந்து நிற்பதிலும். பதின்மடங்கு ரோஜா அத்தர் தண்ணீரில் கலந்தமைந்திருக்கும். அந்தத் தண்ணீருக்குத்தான் பன்னீர் என்று பெயர். லாவந்தர், மல்லிகைமுதலிய வாசனை ஜலமும் இப்படிப்பட்டவைதாம. ரோஜா

வேகமாய்ப் போகவேண்டுமானால், "ஹை! ஹை!!" என்று அதட்டினால் அதிவேகமாய்ச் சவாரிசெய்யும் என்று சொல்லி, பொன் மூட்டையை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

குதிரைமேலேறிக்கொண்டபொழுது முத்துசாமிக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று; சவாரிசெய்யும்போது அதினும் அதிகமான சந்தோஷமுண்டாயிற்று. அப்படியே சிறிதுதூரம் போகையில் பின்னும் வேகமாய்ப் போகவேண்டுமென்று விருப்பங்கொண்டு கடிவாளத்தைக் குலுக்கி, ஹை, ஹை என்று குதிரையை அதட்டினான். அதட்டினவுடனே அது நாலுகால் பாய்ச்சலாய் வெகு வேகமாக ஓட ஆரம்பித்து அங்கே ஓரிடத்தில் அவனை மயக்கிக் கீழே தள்ளிவிட்டது. தள்ளிவிடவே அவன் பாதையோரத்திலுள்ள வாய்க்காலில் புரண்டு வீழ்ந்தான். அப்பொழுது அந்த வழியே விலைக்குப் பசுமாடு ஒன்று வாங்கி ஓட்டிக்கொண்டு போன ஒருவன் அக்குதிரையைப் பிடித்துக்கொள்ளாமலிருந்தால் அதுவும் எங்கேயோ காற்றாய்ப் பறந்தோடிப்போயிருக்கும்; அம்மனிதன் அதை ஓடிப்போகவொட்டாமல் பிடித்துக்கொண்டு நின்றான். இதற்குள் கீழேவீழ்ந்த குதிரைக்காரன் மெல்லத் தலையெடுத்துப் பார்த்துத் தனக்குக் குதிரையால் நேரிட்ட துன்பத்தைப் பற்றி மிக்க விசனமும் கோபமும் அடைந்தவனாகி மெதுவாய் எழுந்து பள்ளத்திலிருந்து பாதைக்குவந்து அங்கே குதிரையைப் பிடித்துக்கொண்டு நின்ற குடியானவனைப்பார்த்து, ஐயா, குதிரை மேலேறிச் செல்வதைப்போலப் பேதைமையானது வேறொன்றுமில்லை; அதினும் இத்தன்மையாய் மேலேயிருப்பவனைக் கீழே தள்ளிக் கழுத்தை முறிக்கும்படியான கொடிய மிருகத்தின்மேல் ஏறிப்போவது மிகவும் கேடுகெட்டது. பிரமாணமாய்ச் சொல்லுகிறேன்! இனி நான் ஒருபோதும் இக்குதிரைமேல் ஏறுவதில்லை. போனதுபோகட்டும்; நீர் இக்குதிரையை எடுத்துக்கொண்டு உமது பசுவை எனக்குக் கொடுப்பீரா? இப்பசுவை ஓட்டிக்கொண்டு அதன்பின்னேயே நடந்துபோனால் ஒரு தொல்லையுமில்லை; மேலும் பசு ஒன்று கையிலிருந்தால் தினந்தோறும் தயிர் பால் வெண்ணெய் தப்பாமல் அகப்படும். அதைவிடச் சவுக்கியமானது வேறொன்றுமில்லை; எவ்வளவுபொருள் கொடுத்தாலும் பசு வாங்கிக்கொள்வதே மேலானது என்றான். அதைக் கேட்ட குடியானவன், நீ அவ்வளவு ஆசைகொண்டு கேட்கும்போது நான் எப்படி மாட்டேனென்று சொல்லுகிறது; உன் இஷ்டப்படியே இந்தப் பசுவையெடுத்துக்கொள், நான் உன் குதிரையை ஓட்டிக்கொண்டுபோகிறேன் என்று சொன்னான்.

அவனுக்கு ஆயிரம் வந்தனம்செய்து முத்துசாமி அவன் சம்மதியை அங்கீகரிக்க, குடியானவன் தன் பசுவைவிட்டு அந்தக் குதிரைமேலேறிக்கொண்டு விரைவாகத் தன் ஊருக்குச்சென்றான்.

குதிரையைக் கொடுததுப் பசுவை வாங்கிக்கொண்ட முத்து சாமி தான் மிகுந்த அதிர்ஷ்டசாலியென்று வெகு சநதோஷமாய், இனி நமக்கு ஒரு குறையுமில்லை; கையிலே கொஞ்சம் பலகாரமிருக்கிறது, தாகமெடுக்குமபோதெல்லாம் பசுவைக் கறந்து பாலகுடிக்கலாம்; இதைவிட நமக்கு வேறென்னவேண்டும் என்று களிபபடைந்து தன் ஊருக்குப் போகின்றவழியே போனான். சிறிதுதூரம் செல்லுகையில் வெயில் அதிகமாய்க் கீழும்மேலும் கொளுத்தவே அபபுறம் நடந்துபோகமாட்டாமல் அங்கிருந்த ஒரு மாத்தடியில் சறறு இளைபபாறும்படி உட்காநது தன் கையிலிருந்த பலகாரத்தைப் புசிகக ஆரம்பித்தான். அதைத்தின்னவே தாகம் அதிகமாயிற்று, அண்டையில் எங்கும் தண்ணீரில்லை. அதனால் அவன் பாலகறந்து குடிக்கவேணடுமென்று அபேக்ஷைகொண்டு பசுவை அம்மாத்தடியில கட்டி அதன்கீழுட்கார்ந்து பால்கறகக ஆரம்பித்தான்; எந்நேரம் அதன்கீழ் அவன் மன்றாடியும் ஒருபில் கூடப் பால் சுரக்கவில்லை, அது கிழப்பசு; பால் எபபடி சுரக்கும்? அவன் தன்னை வருத்துவதைப் பொறுக்கமாட்டாமல் அந்தப் பசு அவனை வலிவாய் ஒரு உதை உதைத்துக் கீழே தள்ளி விட்டது; அவன் மெய்ம்மறந்து மூர்ச்சைபோய்க் கீழே வீழ்ந்தான். வீழ்ந்து வெகு நாழிகைவரையில் அவனுக்குப் பிரஞ்ஞையே யில்லை. இப்படியிருக்க அவனுடைய அதிர்ஷ்டத்தால் இடையன் ஒருவன் ஒரு ஆட்டை ஓட்டிக்கொண்டு அந்தவழியாக வந்தான். அவன் அவ்விடத்தில முத்துசாமி வீழ்ந்துகிடக்கிற நிலையைக் கண்டு மிகவும் பரிதாபப்பட்டு அவனை மெலல எழுப்பி உட்கார வைத்துத் தன் கையிலிருந்த பாலைக் கொஞ்சம் வார்த்து அவனுக்குப் பிரஞ்ஞை உண்டாகும்படி செய்து, பிறகு நடந்த விசேஷமென்னவென்று கேட்க, முத்துசாமி, நடந்த வரலாற்றையெல்லாம் சொல்லிப் பால்கறக்கப்போய் பசு உதைத்துக் கீழே வீழ்ந்து பல் உடைந்துபோயிற்று என்றான். அதுகேட்டு அந்த இடையன், அவன் ஒன்றும் தெரியாத பேதையென்று தெரிந்து கொண்டு தன் கையிலிருந்த பாலைப் பின்னும் கொஞ்சம் அவனுககு வார்த்து அவனைச் சந்தோஷப்படுத்திப் பின்பு, மகனே, இந்தக் கிழப்பசுவை வைத்துக்கொண்டு பால்வேண்டுமென்றால் எங்கிருந்து வரும; பால்கொடுக்கிற பசுவானால் கன்றுக்குட்டியும் கூட இராதா? இனி இந்தப் பசு ஏர் உழுதற்குத்தான் உதவும்; மற்றொன்றுக்கும் உதவாதென்றான். அதுகேட்டு அவன், இந்தச் சூது யாருக்குத் தெரியும், கிழமோ பழமோ நானறியேன்; ஏருழுவதென்றால வயலிருந்தாலல்லவோ? பாலவேண்டுமென்றே நான் பசுவாங்கினது; இப்பொழுது நீர் கொடுத்த பால் வெகு உருசியாயிருக்கிறது; இது உமக்கு ஏது என்றான்.

அதற்கு இடையன் அது இந்த ஆட்டுப்பால், உனக்குப்

பாலின்மேல் ஆசையிருந்தால் இந்த ஆட்டை எடுத்துக்கொள், கிழமானாலும் ஆகிறது; உன் பசுவை நான் எடுத்துக்கொள்கிறேன். இவ்வளவு நேசமாய் ஒருவன் வருந்திக் கேட்கும்போது மாட்டேனென்று சொல்ல யாருக்குத்தான் மனம் வரும் என்று கூற, அந்த மூடன், ஐயா உம்முடைய உதாரகுணத்திற்காகக் கடவுள் உம்மைக் கடாக்ஷிப்பாராக என்று அவனை வாழ்த்தி, தன் பசுவை அவனுக்குக் கொடுத்து அவன் கொண்டுபோன ஆட்டை வாங்கிக் கொண்டான்.

இடையன் வெகு சந்தோஷமாய்ப் பசுவை ஓட்டிக்கொண்டு போக, முத்துசாமியும் மிகுந்த மகிழ்ச்சிகொண்டவனாய் ஆட்டை ஓட்டிக்கொண்டு தன் ஊருக்குத் திரும்பினான். திரும்பிப்போகும்போது, தனக்கு எல்லாக்காரியமும் தான் நினைக்கிறபடியே கைகூடுகின்றனவென்றும், தான் மாற்றுகிற பொருளெல்லாம் ஒன்றுக்கொன்று உயர்ந்தவையாகவே யிருக்கின்றனவென்றும் தன் அதிர்ஷ்டத்தை நினைத்துத் தானே மனமகிழ்ந்துகொண்டு போனான். அவ்வண்ணமே சிறிதுதூரம் போகையில் சிறந்த வாத்து ஒன்றை ஓட்டிக்கொண்டுவந்த ஒரு பையன் அவனுடன் சேர்ந்தான். அவர்கள் இருவருமாய்ப் பேசிக்கொண்டே போகையில் முத்துசாமி தான் செய்த காரியங்களும், அதனால் தனக்கு நேர்ந்த அதிர்ஷ்டமும் இத்தன்மையனவென்று எடுத்துச் சொல்ல, அந்தப் பையன் செய்தி தெரிந்துகொண்டு, தான் அந்த வாத்தை ஒரு பிரபுவின் வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு போவதாகவும், அது வெகு நன்றாய் வளர்க்கப்பட்டுப் பருத்துக் கொழுத்திருப்பதாகவும் சொன்னான். அதற்கு முத்துசாமி, ஆம், நீ சொல்வது சரிதான்; உன் வாத்துக்கு என் ஆடு குறைந்ததல்லவே, இது வேளைக்குவேளை வேண்டிய பால் கொடுக்கின்றது என்று சொல்ல, அந்தப் பையன் சிறிது மயக்கம் கொண்டவன்போல நான்குபக்கமும் திரும்பிப்பார்த்துத் தலையசைத்து, ஆம், அது உண்மையே, ஆனால் ஒன்று, சொல்ல எனக்கு அச்சமாயிருக்கிறது; இப்பொழுது நான் வந்த வழியில் அடுத்த ஊரிலே ஒரு ஆட்டைக் குட்டியோடுகூட யாரோ திருடிக்கொண்டு போய்விட்டதாகப் பெருங்கூச்சலாய் இருக்கிறது. அதைத் தேடிப்பார்த்துக்கொண்டு வரும்படி நாலா மூலையிலும் ஆட்களைத் துரத்தியிருக்கிறார்கள். இப்போது நீ வைத்துக்கொண்டிருக்கிற ஆடு அதுவேதானோவென்று எனக்கு வெகுநடுக்கமாயிருக்கிறது. உடனே ஒருவருக்கும் தெரியாமல் எங்கேயாவது ஒரு மூலையில் இதை ஒளித்துவைத்தால்தான் பிழைக்கலாம்; இல்லாவிட்டால் தலைபோய்விடுமென்று தோன்றுகிறது என்றான்.

முத்துசாமி அந்தப் பேச்சைக் கேட்டவுடனே உடம்பு நடுக்கமுற்று, பிள்ளாய், நீ இவ்வளவு வருத்தமெடுத்துக்கொண்டுவந்து இச்செய்தியை எனக்குத் தெரிவித்தாயே! நீ என்றும் குறைவில்

லாமல் வாழவேண்டும். அருகாமையில் எனக்கு ஓரிடமும் தெரியாதே; நான் எங்கேபோய் ஒளிந்துக்கொள்கிறது. உனக்கு இங்கே அறிந்தவிடங்கள் அநேகம் இருக்குமாகையால நீ இந்த ஆட்டை எடுத்துக்கொண்டு உன் வாத்தை எனக்குக் கொடுத்துவிடவேண்டுகிறேன் என்று கெஞ்சிக் கேட்க, அந்தப பையன், நீ இவ்வளவு வருத்தப்பட்டுக் கேட்கும்போது என்னசெய்கிறது, உன் இஷ்டபபடியே ஆகட்டும், தனக்குத் தீங்குநேரிட்டாலும பிறாககுத் தீங்கு நேரிடுவதை நான் கண்ணால் பாரக்கமாட்டேன் என்று சொல்லி, தன் வாத்தை அவனுக்குக் கொடுத்து ஆட்டை ஓட்டிக்கொண்டு போய்விட்டான். முத்துசாமியும் மனவிசாரம் நீங்கி, நிம்மதியாய் வாத்தைப் பிடித்துக்கொண்டு தன் ஊருக்குபபோகிற வழியே போனான்.

போகும்போது ஒரு ஊரண்டை பாதையோரத்திலே சாணை பிடிப்பவன் ஒருவன் விநோதமாய்ப் பாட்டுபபாடிக்கொண்டு உட்காநதிருநதான். வழியேபோன முத்துசாமி அவனைப் பாரதது, ஐயா, உமது பாட்டைக் கேட்கும்போது சிறந்த வியாபாரமொன்று உமது கையிலிருபபதுபோலக் காண்கிறதே என்று கேட்க, அவன், ஆம், என் வியாபாரம் மிகச் சிறந்ததுதான். இந்த வியாபாரத்தில் எப்போதும் கையில் காசு கூததாடிக்கொண்டேயிருககும், சாணைபிடிப்பவனுக்கு எவ்விடத்திலும் ஜீவனமுண்டு. அதிருக்கட்டும்; உன் வாத்து வெகு அழகாயிருககிறதே, இது எவவிடததில் வாங்கினது என்றான்.

முத்துசாமி அதற்கு, இது நான் எங்கும் விலைக்குவாங்கினதன்று, என்னிடமிருந்த ஆட்டைக்கொடுத்து மாற்றினது; ஆட்டோ, என் பசுவைக்கொடுத்து மாற்றினது; பசு குதிரைககு மாற்றினது; குதிரை என்னிடமிருந்த ஒரு பெரிய பொன்கட்டியைக் கொடுததுக்கொண்டது, பொன்கட்டியேதென்பாயோ? நான் ஏழு வருஷம உழைத்த உழைப்புக்குக் கூலியாக என் யஜமானன் கொடுத்தது என்று தன் வரலாற்றை முழுதும் சொல்லிமுடித்தான்.

அது கேட்டுச் சாணைக்காரன், மேலுமேலும உன் பாக்கியம் பெருகுவதைக் கேட்க வெகு சந்தோஷமாகிறது; கையில் எப்போதும் காசு குலுங்கும்படியான வகைதேடிக்கொள்வது இதைவிட மேலானதென்று நினைக்கிறேன் என்று சொல்ல, முததுசாமி, அதற்காக நான் செய்யவேண்டியதென்னவென்று கேட்டதற்கு, நீயும் என்னைபபோல் ஒரு சாணைககாரனாகவேண்டும்; அந்தத் தொழிலுக்குச சாணைக்கல் ஒன்றுதான் முக்கியமாய்வேண்டும், அது இருந்தால் மறறவையெல்லாம் தனககுததானேவந்து அமையும; வேண்டுமானால நான் உனக்கு ஒரு சாணைககல தருகிறேன்; அதற்காக நீ மற்றொன்றும விலைகொடுக்கவேண்டாம; இந்த வாத்தைக் கொடுத்தால போதுமென்றான். அவன் அதற்குச்

சம்மதிக்க, சாணைக்காரன் அண்டையிலிருந்த ஒரு பெருங்கல்லை யெடுத்து அவன் கையில்கொடுத்து இதைக் கொண்டுபோனால் உனக்கு ஒரு குறையுமுண்டாகாது என்று சொல்லியனுப்பினான்.

அதைப் பெற்றுக்கொண்டு அந்தப் பேதைமனிதன், ஆ! நாம் அதிர்ஷ்டத்துக்கென்றே பிள்ளைபிறந்தோம். எல்லாம் நமக்கு நினைத்தபடியே கைகூடிவருகின்றன; வரவேண்டியவையெல்லாம் தாமே வலியவந்து அமைகின்றன; ஸம்பத்குமாரனென்றால் நமக்கே தகுமென்று மனங்களித்துக்கொண்டே போனான். சிறிது தூரம் போகையில் வெயில் அதிகமாயிற்று; இளைப்பும் அதிகரித்தது. அவற்றோடு தலையில் பாறையின் சுமையும் வருத்தவே அதைக் கீழே எறிந்துவிட்டுச் சும்மா நடந்துபோனாற் போதுமென்றாயிற்று. அத்தருணத்தில் சமீபத்திலே மடுவொன்று காணப்பட, அதிலே கைகால்கழுவிக் கொஞ்சம் தண்ணீர்குடித்துவரும்படி போனான். போய்த் தலைமேலிருந்த கல்லைக் கரையோரத்திலிறக்கி வைத்துத் தான் குனிந்து தண்ணீர் குடிக்கப்பார்த்தான். அச்சமயத்தில் அவன் கால்பட்டு நழுவிக் கரைமேலிருந்த கல் திடுமென்று மடுவில் வீழ்ந்துபோயிற்று. வீழ்ந்து அமிழும்போது பார்த்த அம்மனிதன் வெகு சந்தோஷமாய் எழுந்து குதித்துக் கூத்தாடி, நமக்கு இருந்த பெருஞ்சுமையைச் சுவாமி தானே தீர்த்து நிம்மதியாக்கினார். நம்மைப்போல பாக்கியமுள்ளவன் இந்தப் பூமண்டலத்தில் ஒருவனுமில்லையென்று உரத்துக் கூவிக் கடைசியாய்க் களிப்படைந்து குதித்துக் கைவீசிக்கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தான்.

சமாசாரம்.

சேனைத்தொகை.—ருஷியருக்கு முப்பது லட்சம் சேனையுண்டு; போர்க்களத்தில் 25 லட்சம் சேனைநிற்கும். ஜெர்மானியருக்கு 60 லட்சம் சேனையுண்டு; யுத்தபூமியில் 38 லட்சத்து 60 ஆயிரம் சேனைநிற்கும். ஆஸ்திரியருக்கு 12 லட்சத்து 65 ஆயிரம் சேனையுண்டு. இத்தாலியருக்கு 25 லட்சத்து 70 ஆயிரம் சேனையுண்டு. இந்த நான்கு ராஜ்யங்களின் சைநியவெள்ளம் இப்படி ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்டதாயிருக்கின்றது என ஒரு பத்திராதிபர் எழுதியிருக்கிறார்.

யானைகளால் பயிரழிவு.—திருப்பத்தூருக்குக் கிழக்கில் ஜாவாதிமலையில் மூன்று யானைகளிருந்து பக்கங்களிலுள்ள பயிர்களை அழித்துவந்தன. குடிகள் பயிர்ச்சேதத்தைப்பற்றிச் சேலம் ஆக்டிங் கலெக்டருக்கு அறிவித்ததின்மேல் கலெக்டர் கவர்ன்மெண்டாருக்கெழுதினார். கவர்ன்மெண்டாரும் யானைகளைக் கொல்லவும் அம்மூன்றில் குட்டியாகிய ஒன்றைப் பிடிக்கவும் உத்தரவளித்தார்கள். யானைகளும் சொல்லப்பட்டன

சிங்கப்பூர்.—சிங்கப்பூரில் குடியேறியிருக்கும் சீனர்கள் தங்களுடைய ஜநநபூமியினிடத்தில் தங்களுக்கு இருக்கும் அபிமானத்தை ஒரு மிகுந்த வேடிக்கையான விதமாக வெளிப்படுத்துகிறார்கள். சீனர்கள் அங்கே ஆடுகிற நாடகங்களில் சிலபேர் பிரான்சியப் படைவீரர்களாகவும், சிலர் சீனப்படைச் சேவகர்களாகவும் வேஷம்போட்டுக்கொண்டு சண்டை போட்டு அதில் பிரான்சியா தோற்றுப்போவதுபோல ஆடுகிறார்களாம். அமர்க்களத்தில் ஜயிக்காவிட்டாலும் நாடகத்திலாவது வெற்றி அடைவோம் என்று விரும்பினார்போலும்.

ராஜாக்களுக்குக் கொடுத்த பட்டம்.—புதுக்கோட்டை ராஜா இராமசந்திர தொண்டைமான் பஹதூர் அவர்களும் அவர் வமிச பரம்பரையாரும் பதினொன்று குண்டு மரியாதையை அனுபவித்து வரும்படி நமது சக்கரவர்த்தினியார் தயைசெய்ததுமன்றி, இனி மேற்படி ராஜாவை "மேன்மை தங்கிய" என்று பொருள்படும் ஹிஸ் ஹைனெஸ்" என்ற பதங்களைத் தொடர்ந்து மஹாராஜாவென்று வழங்கும்படியாகவும் சிறந்த பட்டப்பெயர் அளித்தனர்.

வங்காளத்தைச் சார்ந்த கூச்பீரர் ராஜாவுக்கு மாட்சிமைபொருந்திய கவர்னர் ஜெனரல் அவர்களுடைய முயற்சியால் இந்திய சக்கரவர்த்தினியாரிடத்திலிருந்து மகாராஜா என்கிற பட்டப்பெயர் வந்திருக்கிறது. இந்தப் பட்டப்பெயர் இவர் சந்ததியாருக்கும் எப்பொழுதும் வழங்கிவரவேண்டுமென்பது விசேஷத்தயவென்னலாம்.

குழந்தைகள் கூடிய காட்சிசபை:—இங்கிலாந்தில் மாஞ்செஸ்தர் பட்டணத்திலே குழந்தைகளுடைய காட்சிசபை ஒன்று கூடியது. அதில் பல பட்டணங்களிலுமிருந்து அநேகம் குழந்தைகள் கொண்டுவந்து காண்பிக்கப்பட்டன. சுமார் 10,000 ஜனங்கள் அந்த விநோதத்தைப் போய்ப் பார்த்து மனமகிழ்ந்தார்கள்.

ஏடன்பட்டணம்.—அரபியாவிலுள்ள ஏடன்பட்டணத்தை எவ்வளவு பலப்படுத்தி வைத்திருக்கிறார்களோ, அவ்வளவும் அங்கிலேயருக்கு இந்தியா சுவாதீனமாகுமென்று தீர்மானிக்கப்பட்டதின்பேரில் அந்தப் பட்டணத்தில் பலமான கோட்டை ஒன்று கட்ட உத்தேசித்திருக்கிறார்கள். அந்த ஏடன்பட்டணம் இங்கிலீஷ்காரருக்குச் சொந்தமானதாயினால், அதைக் கட்டுகிறவிஷயத்தில் வேறுதேசத்தார் ஒருவரும் உதவிசெய்யமாட்டார்கள்; இங்கிலாந்தே அதற்குவேண்டிய செலவு முழுமையும் கட்டிக்கொடுக்கவேண்டுமென்றபோது, அது கூடாது, இந்தியாவும் இங்கிலாந்தும் அதற்குப் பிடிக்கும்செலவைப் பங்கிட்டுக்கொள்ளவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டதாம்.

ரிப்பன் சிங்காரத்தோட்டம்.—இப்பொழுது இத்தேசம்விட்டுச் சுதேசத்துக்குப் போகின்ற ராஜப்பிரதிநிதியாகிய ரிப்பன் பிரபு அவர்களுடைய பெருமைக்காகக் கல்கத்தாநகரத்தில் "ரிப்பன் சிங்காரத்தோட்டம்" என்று ஒரு உத்தியானவனம் அமைக்கும்படி உத்தேசித்து, அதற்காகச் சுதேசிகள் வசிக்கின்றவிடத்திற்குச் சமீபத்திலே விசாலமான நிலம் ஒன்று பார்த்திருக்கிறார்கள்.

C. K S. Press, Vepery, Madras, 1884

THE MEETING OF ALEXANDER THE GREAT AND PORUS.

ஸிகந்தரும் புருஷோத்தமராஜனும் சந்தித்தல்.